
AHARAM

# அகரம்

தரம் 5 - II வரை | எண்: 07 எழுத்து: 04 ஏப்ரல் 2013 | www.aharam.lk

# பயமறியா போர்க் குதிரை



## சுறுசுறுப்பு

## வினைத்திறனாகக் கற்கும் மாணவனாக மாறுவது எப்படி?

மாதாந்த சிறுவர் சஞ்சிகை

Des: Kinniya Anees

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இக்ரா கல்வி நிலைய நூல் அறிமுகம்

அஷ்ஷெய்க். எம்.எம்.எம். அஸாம் எழுதிய நூல்கள்




01. இஸ்லாம் தரம் 1 - 100.00
02. இஸ்லாம் தரம் 2 - 140.00
03. இஸ்லாம் தரம் 3 - 140.00
04. இஸ்லாம் தரம் 4 - 200.00
05. இஸ்லாம் தரம் 5 (மீள்பதிப்பு) - 100.00
06. இஸ்லாம் தரம் 6 - 170.00
07. இஸ்லாம் தரம் 7 - 200.00
08. இஸ்லாம் தரம் 8 - 200.00
09. இஸ்லாம் தரம் 9 - 200.00
10. ஜுனியர் அட்லஸ் - 135.00
11. இலகுவழி ஸர்ஃப் நூல் - 250.00
12. மும்மொழி அரபுச் சொற்களஞ்சியம் - 280.00
13. பாலர் அரபு எழுத்துப் பயிற்சி - 150.00
14. அரபுமொழி இலக்கங்கள் - 75.00

## இஸ்லாமிக் புக் ஹவுஸ்

77, தெமடகொட வீதி, கொழும்பு - 09

011-2684851 www.ibh.lk

விளம்பர அனுசரணை

இக்ரா கல்வி நிலையம், த.பெட்டி இல. 750, கொழும்பு

www.iqracolombo.com

15. அஸ்மாஉல் ஹுஸ்னா (மும்மொழியிலும்) - 100.00
16. அரபு கூட்டெழுத்துப் பயிற்சி - 180.00
17. சந்தர்ப்ப துஆக்கள் (10 அட்டைகள்) - 90.00
18. இலகுவழி அடிப்படை அரபு இலக்கணம் - 300.00
19. இலகுவழி அடிப்படை அரபு இலக்கணம் - பயிற்சி நூல் - 250.00
20. அரபு அரிச்சுவடி அட்டை (வர்ணப் படங்களுடன்) - 75.00
21. அரபு அரிச்சுவடி எழுத்துக்கள் அட்டை (மும்மொழி வழிகாட்டலுடன்) - 75.00
22. அரபுச் சொற்கள் (மும்மொழியிலும்) தரம் 1,2,3 - 50.00
23. பெரிய மஃஸூராத் (முழுத் தொகுப்பும் தமிழ் மொழிபெயர்ப்புடன்) - 120.00
24. பாலர் அரபு - 100.00
25. அன்புக் குழந்தைகளுக்கு அழகான பெயர்கள் - 120.00
26. நாளாந்தப் பதிவேடு மற்றும் பெற்றார் ஆசிரியர் கையேடு (குர்ஆன் மத்ரஸா மாணவர்களுக்கானது) - 70.00
27. தொழுகைக்குப் பின்னர் ஓதும் துஆக்கள் அட்டை (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) - 15.00
28. பத்ஹா, கஸ்ரா, ழும்மா அடையாளங்களுடன் மூன்று அரபு அரிச்சுவடி அட்டை (வர்ணப் படங்களுடன் மும்மொழியிலும்) - 50.00
29. இஸ்லாமிய பொது அறிவுப் பெட்டகம் - அச்சில் - 250.00
30. அரபிய்யது லின்னாஷிஈன் பாகம் 2 (தமிழ் மொழிபெயர்ப்புடன்) - அச்சில்
31. My Dua Book (Zumrath Zazna Jilhan) - 100.00
32. Fun with Arabic Starter (Zumrath Zazna Jilhan) - 150.00
33. Fun with Arabic 0 A (Zumrath Zazna Jilhan) - 190.00
34. Fun with Arabic OB (Zumrath Zazna Jilhan) - 175.00
35. Fun with Arabic book 01 (Zumrath Zazna Jilhan) - 180.00
36. Fun with Arabic book 02 (Zumrath Zazna Jilhan) - 180.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 ஏப்ரல், 2013 எழுத்து: 04

# அகரம்

## உள்ளே...





06






வினைத்திறனாகக் கற்கும் மாணவனாக மாறுவது எப்படி? 25




World Today 23




14



சுறுசுறுப்பு 21




38




10

பாடங்கள்

| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 31 | தமிழ் | 28 |
| விஞ்ஞானம் | 34 | புலமைப் பரிசில் | 39 |



LIBRARY
JAFFNA



பிரதம ஆசிரியர்
ஏ.ரி.எம். நௌபல்

ஆலோசனைக் குழு
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

ஆசிரியர்
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

உதவி ஆசிரியர்
ஜே.எம். அஸீம் (நளீமி)

தளக் கோலம்
எம்.ஐ.எம். ஹரீஸ்



தொடர்புகளுக்கு:
அகரம்
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
E-Mail: *editor@aharam.lk*
*www.aharam.lk*



சந்தா விபரம்
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்புள்ள மாணவச் செல்வங்களே!**
**அஸ்ஸலாமு அலைக்கும்.**

இது முதலாம் தவணைப் பரீட்சைக் காலம். பரீட்சை முடிந்ததும் விடுமுறை. பரீட்சைக்காக மும்முரமாகப் படித்த நீங்கள் தொடர்ந்து வரும் தவணை விடுமுறையை மகிழ்ச்சி கரமாகக் கழிக்கும் சுறுசுறுப்பில் இருப்பீர்கள்.

நாம் அதிகமாகப் பிரார்த்திக்கின்ற துஆக்களில் ஒன்று தான், ''எங்களது ரப்பே! எங்களுக்கு இவ்வுலகிலும் அழகியவற்றைத் தருவாயாக. மேலும், மறுமையிலும் அழகியவற்றையே தருவாயாக. நரக நெருப்பிலிருந்தும் பாதுகாப்பளிப்பாயாக" என்பதாகும்.

இது அனைவருக்கும் பொதுவான துஆவாக அமைந் திருப்பதனை நீங்கள் காணலாம். ஆனாலும், இந்த துஆவைக் கேட்பவருக்கேற்ப அதன் பொருள் வேறுபடும். உதாரண மாக, ஒரு வியாபாரி இந்த துஆவைக் கேட்பானாகில் அதன் பொருள் இவ்வுலகில் அவனது வியாபாரம் மேம்பட வேண்டுவதாகவும் ஒரு விவசாயி கேட்பானாயின் அவனது விவசாயம் மேம்பட வேண்டுவதாகவும் அமையலாம்.

அதேபோல உங்களைப் போன்ற ஒரு மாணவன் அல்லது மாணவி இந்த துஆவைக் கேட்பாராயின் அதன் பொருள் என்னவாக இருக்கும்? ஒரு மாணவன் அல்லது மாணவிக்கு இவ்வுலகில் அழகியது எது? அவர் கற்கின்ற கல்வியில் உச்சமான பெறுபேற்றைப் பெறுவதாகவே அது இருக்கும். உதாரணமாக, ஒவ்வொரு பாடத்திலும் 100 புள்ளிகளைப் பெறுவது ஒரு மாணவன் அல்லது மாணவியைப் பொறுத்த வரை இவ்வுலகில் கிடைக்கப் பெறும் அழகிய அடைவாக அது அமையும். இது உங்களது குறுங்கால இலக்கு (Short term goal) ஆகும். இந்த அடைவைத் தொடர்ந்து ஏனைய அனைத்தும் கூடவே வரும்.

இந்த துஆவின் இரண்டாவது பகுதி அல்லாஹ்வை றப்பாக ஏற்றுக் கொண்ட ஒவ்வொரு மனிதனதும் நெடுங் கால இலக்கைப் (Long term goal) பற்றியதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் மறுமையில் கிடைக்கக் கூடிய மிக அழகிய விடயம் எதுவாக இருக்க முடியும்? அது வானம் பூமியின் அளவு விசாலமான உயர்வான சுவனத்தைத் தவிர வேறொன் றாக இருக்க முடியுமா?

"இம்மை மறுமையின் விளை நிலம்" எனும் நபி மொழிக்கு ஒப்பவும், அல்லாஹ் உங்களுக்கு வழங்கியிருப்பவற்றைக் கொண்டு மறுமையின் வீட்டைத் தேடிக் கொள்ளுங்கள் எனும் அல்குர்ஆனின் கட்டளைக்கு அமைவாகவும் மறுமையின் வீடான சுவனத்துக்கான ஏற்பாடுகளை நாம் இம்மையிலேயே செய்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

இவ்வுலகில் உங்களுக்கு அல்லாஹ் வழங்கியிருப்பது மாணவப் பருவமும் கல்வியுமாகும். எனவே, இந்த இரண் டையும் கொண்டு இவ்வுலகில் அழகிய தான குறுங்கால இலக்கையும் மறுமையில் அழகியதான நெடுங்கால இலக்கையும் பெற்றுக் கொள்வதற்காகவும் நீங்கள் திட சங்கற்பம் பூண வேண்டும். அதற்காக அயராது உழைக்க வேண்டும்.

இலக்கைப் பற்றி அறியாத முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிப்பதில்லை. இதனைக் கருத்தில் கொண்டு உங்களது இலக்குகளைத் தெளிவாக வகுத்து உங்க ளது ஆழ்மனதில் (Subconcious mind) நன்றாகப் பதித்துக் கொள்ளுங்கள். அது உங்களை இலக்கை நோக்கி வழி நடத்தும். இனி என்ன? இன்ஷா அல்லாஹ் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழும் அற்புதம் அல்குர்ஆன்

# அல்குர்ஆன் கூறும் கதைகள்

**மத்யன்வாசிகள்** பாவம் செய்வதில் பிடிவாதமாகவே இருந்து விட்டனர். மனமுரண்டாக நடப்பதுதான் கௌரவம் என்று கருதினார்கள். தீமையிலும் மோசடியிலும் இன்ப சுகம் அனுபவிக்க எத்தனித்தார்கள். அல்லாஹ்வின் வழிகாட்டல்களை எடுத்துரைத்த நபி ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களை இழிந்துரைத்தனர்.

பாவத்தில் பிடிவாதமாக இருப்பது அநியாயத்திலும் அநியாயமாகும். இறை தண்டனையைக் கேட்டுப் பெறுவதாகும். அந்தோ பரிதாபம்! இறை தண்டனை அவர்கள் மீது விதியாகியது. பேரோசையுடன் நிலம் பெரும் நடுக்கத்துடன் ஆட்டம் கண்டது. அவர்களோ பரிதாபகரமாக தம் வாசஸ்தலங்களிலேயே குப்புற வீழ்ந்து மடிந்து போனார்கள்.

## மத்யன்வாசிகளின் சகோதரர் ஷுஐப் (அலைஹிஸ்ஸலாம்)

சுரண்டல், மோசடி, பாவத்தில் பிடிவாதமாக இருப்பது, சத்தியத்தை ஏளனம் செய்வது, புவி நடுக்கத்தை உண்டு பண்ணுமளவு பாரதூரமானது. இந்தக் கதையை அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் பொருள் ஆழத்துடன் அறிந்து உணரவும் பாடம் படிக்கவும் எமக்குக் கூறிக் கொண்டே இருக்கிறது.


"மேலும், மத்யன் வாசிகளிடம் அவர்களின் சகோதரர் ஷுஐபை நாம் அனுப்பினோம். அவர் கூறினார்; "என் சமுதாயத்தினரே! அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள்! அவனைத் தவிர உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. மேலும், அளவையிலும் நிறுவையிலும் குறைவு செய்யாதீர்கள்! (இன்று) உங்களை நல்ல நிலையில் நான் காண்கின்றேன். ஆனால், (விரைவில்) துன்பம் சூழும் ஒரு நாளின் வேதனை உங்களைப் பீடிக்குமோ என நான் அஞ்சுகின்றேன். மேலும், எனது சமுதாயத்தினரே! நேர்மையான முறையில் முழுமையாய் அளந்து கொடுங்கள்; முழுமையாய் நிறுத்துக் கொடுங்கள்! மேலும் மக்களுக்கு அவர்களது பொருட்களைக் குறைத்துத் தராதீர்கள். பூமியில் குழப்பம் செய்து கொண்டு திரியாதீர்கள். அல்லாஹ்விடம் மீதமாகும் லாபமே உங்களுக்குச் சிறந்ததாகும். நீங்கள் இறை விசுவாசிகளாக இருப்பீர்கள் எனில்! எனினும் நானோ உங்களைக் கண்காணிப்பவன் அல்ல."

அதற்கு அவர்கள், "ஷுஐபே! எங்கள் மூதாதையர் வணங்கி வந்தவற்றை நாங்கள் விட்டுவிட வேண்டும் என்றா அல்லது எங்களுடைய செல்வத்தை எங்கள் விருப்பப்படி பயன்படுத்த எமக்கு அதிகாரம் இருக்கக் கூடாது என்றா உம்முடைய தொழுகை உமக்குக் கற்றுத் தருகிறது? உண்மையில் நீர் பெருந்தன்மையும் நேர்மையும் கொண்டவர் தாம்" என்று (ஏளனமாகக்) கூறினார்கள்.

அதற்கு ஷுஐப் கூறினார்: "எனது சமுதாயத்தினரே! நீங்கள் சற்று சிந்தியுங்கள். நான் என் இரட்சகனிடமிருந்து தெளிவான சான்றினைப் பெற்றிருக்கின்றேன். இத்துடன் அவன் தன் சார்பிலிருந்து தூய்மையான உணவையும் எனக்கு வழங்கியிருக்கின்றான். (அதற்குப் பிறகும் உங்களுடைய தவறான செயல்களிலும் தடுக்கப்பட்டவற்றை உண்பதிலும் உங்களோடு எவ்வாறு நான் கூட்டுச் சேர முடியும்?) மேலும், எவற்றைச் செய்ய வேண்டாம் என்று உங்களை நான் தடுக்கின்றேனோ அவற்றை நான் செய்தவற்கு ஒருபோதும் விரும்புவதில்லை. என்னால் முடிந்தவரை சீர்திருத்தம் செய்யவே நான் விரும்புகின்றேன். மேலும், (நான் ஆற்ற விரும்புகின்ற அனைத்தும்) அவனையே முழுமையாகச் சார்ந்து விட்டேன்! மேலும், (ஒவ்வொரு விஷயத்திலும்) அவன் பக்கமே நான் திரும்புகின்றேன்."

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




أَبُو بُرْدَةَ بْنُ أَبِي مُوسَى رَضِيَ اللَّهُ عَنْهُ قَالَ: قَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ مَثَلُ الْجَلِيسِ الصَّالِحِ وَالْجَلِيسِ السَّوْءِ كَمَثَلِ صَاحِبِ الْمِسْكِ وَكِيرِ الْحَدَّادِ لا يَعْدَمُكَ مِنْ صَاحِبِ الْمِسْكِ إِمَّا تَشْتَرِيهِ أَوْ تَجِدُ رِيحَهُ وَكِيرُ الْحَدَّادِ يُحْرِقُ بَدَنَكَ أَوْ ثَوْبَكَ أَوْ تَجِدُ مِنْهُ رِيحًا خَبِيثَةً

(صحيح البخاري)

*முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூ புர்தா இப்னு அபூ மூஸா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:*

"நல்ல நண்பனுக்கும் கெட்ட நண்பனுக்கும் உதாரணம் கஸ்தூரி விற்பவனையும் கொல்லனையும் போன்றாகும். கஸ்தூரி விற்பவனிடம் நீ கஸ்தூரியை வாங்காவிட்டாலும் அதன் நறுமணத்தை நீ பெற்றுக் கொள்வாய். கொல்லனோ உனது மேனியை அல்லது ஆடையை எரித்து விடுவான் அல்லது அவனிடமிருந்து துர்வாடையைத்தான் நீ பெற்றுக் கொள்வாய்." (அல்புகாரி)

---

மனிதன் இவ்வுலகில் பிறந்தது முதல் மரணிக்கும் வரை சமூகத்துடன் இணைந்து வாழ்பவனாகக் காணப்படுகின்றான். இச்சமூகத் தொடர்பின் இன்றியமையாத ஒரு விடயமே ஒருவன் இன்னொருவனுடன் நட்புக் கொள்வதாகும்.

இவ்வாறு ஏற்படுத்திக் கொள்கின்ற நட்பு சிலருக்கு அவர்களுடைய இம்மை, மறுமைக்கு வெற்றியை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக அமைந்துவிடும் அதேவேளை இன்னும் சிலருக்கு அது பாதகமாக அமைந்து இறைவனின் பார்வையில் அவர்கள் மோசமானவர்களாக மாறிவிடுவதற்கும் ஏதுவாய் அமைகின்றது.

மனிதன் சுவனத்தை நோக்கி நகர்வதற்கான முக்கிய ஊடகங்களுள் ஒன்றாகக் காணப்படும் நட்பை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என இஸ்லாம் அழகிய வழிகாட்டல் மூலம் எமக்கு விளக்கியுள்ளது.

நல்ல நண்பனுக்கு கஸ்தூரி வியாபாரியை ஒப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளதாவது நாம் அவனிடம் கஸ்தூரியை வாங்காவிட்டாலும் அதன் வாசனையைப் பெற்று மன ஆறுதலைப் பெறலாம். அதேபோன்று நல்ல நண்பனின் உன்னத பழக்க வழக்கங்களை நாம் கொண்டிராவிட்டாலும் அவனுடைய நற்பெயர் எம்மையும் நல்ல மனிதராக சமூகத்தில் வாழவைக்கும் என்பதுதான்.

தீய நண்பர்கள் தங்களிடமுள்ள கெட்ட பழக்க வழக்கங்களை எமக்குள் கொண்டுவருவதற்கு முயற்சிப்பதுடன் நாம் எம்மை அறியாமலேயே அக்கெட்ட நடவடிக்கைகளுக்கு ஆளாகுவோம். அல்லது நாமும் அவர்களின் செயற்பாடுகளால் கெட்ட பெயருக்கு ஆளாக நேரிடும். எனவேதான் இஸ்லாம் நல்ல நண்பனிடம் காணப்படும் பண்புகளை பின்வருமாறு வகைப்படுத்துகின்றது.

*01. எமது குறை நிறைகளை தெரிந்திருப்பான்*

எம்மில் காணப்படுகின்ற குறை நிறைகளை அறிந்து அதனை அழகிய வழிகாட்டல் மூலம் சீரமைப்பதற்கு முயற்சிப்பான்.

*02. எமது தரத்தை ஒத்திருப்பான்*

அனைத்து விடயங்களிலும் எமது தரத்தை ஒத்திருப்பதன் மூலம் நாம் அவனுடன் நல்ல ஆரோக்கியமான நட்பை ஏற்படுத்தலாம்.

(30ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ளல்

மூவாயிரம் பேருடன் மக்காவிலிருந்து புறப்பட்ட குறைஷிகளின் படையை எதிர்கொள்வதற்காக நபியவர்களும் ஸஹாபிகளும் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைய ஆயிரம் பேர்களுடன் உஹத் களத்தை நோக்கி முஸ்லிம்கள் உற்சாகமாகவும் வீரத்துடனும் துணிவுடனும் புறப்பட்டார்கள். புறப்பட்ட படை உஹதுக்கு அண்மையில் அஷ்ஷவ்த் என்ற இடத்தை அடைந்தது. 3000 பேரை எதிர்க்கப் புறப்பட்ட 1000 பேரில் இப்னு உபை என்ற நயவஞ்சகன் மூன்றில் ஒரு பகுதியான 300 பேரை அழைத்துக்கொண்டு உஹத் களத்திற்கு வர முடியாது என முரண்டுபிடித்தான்.

"நாம் ஏன் எங்களது உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டும்? நபியவர்கள் தனது கருத்தை விட்டுவிட்டு பிறரின் விருப்பத்திற்காகவே இங்கு வந்துள்ளார்கள்'' என்று கூறி படையிலிருந்து திரும்பிவிட்டான். இவ்வாறு 3000 பேரை எதிர்க்க வந்த 1000 பேரில் மூன்றிலொன்றான 300 பேர் விலகிச் செல்வதானது படைப் பலத்தை சிதறடித்து படையில் குழப்பத்தை ஏற்படுத்தி வீரர்களுக்கு நம்பிக்கையீனத்தை ஏற்படுத்திவிடும். ஏலவே, குறைந்த பலத்துடன் இட்ட திட்டங்களை முன்னெடுக்க சிரமம் ஏற்படும்.

இது எதிர்பாராத ஒரு நிகழ்வு. எமது வாழ்விலும் இவ்வாறு எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்ள நேரிடலாம். திட்டமிடலில் 'எதிர்பாராத நிகழ்வுகள் நிகழலாம்' என்ற யதார்த்தத்தைப் புரிந்தே நாம் திட்டமிட வேண்டும். இவ்வாறு எதிர்பாராத நிகழ்வுகளைத் திட்டமிடுவதை Contingency Planning என்பர். எதிர்பாராத நிகழ்வுகளைத் திட்டமிடுவது போலவே அவற்றை எதிர்கொள்ளவும் தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் திட்டமிடல் "வியூகத் திட்டமிடலாக" அமையும்.

சற்று கற்பனை செய்து பாருங்கள்! 1000 பேர் கொண்ட படையின் தளபதியாக 3000 பேர் கொண்ட படையை எதிர்க்க நீங்கள் புறப்பட்டுச் செல்கின்றீர்கள். உங்களுடன் வந்தவர்களில் 300 பேர் இறுதிக் கட்டத்தில் பிரிந்துசென்றுவிடுகிறார்கள். இப்போது உங்கள் நிலைமை எவ்வாறிருக்கும்! சரி, நபியவர்கள் இந்த எதிர்பாராத நிகழ்வை எவ்வாறு எதிர்கொண்டார்கள் எனப் பார்ப்போம்.

நிலைமைகளை அவதானித்த நபியவர்கள் தைரியமாக எவ்வித சலனமும் இன்றி துணிவுடன் மீதமிருந்த 700 ஸஹாபிகளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அப்போது மற்றுமொரு தடையும் காத்திருந்தது. அதுதான் உஹத் களத்தை நபியவர்கள் நெருங்கமுடியாதவாறு எதிரிகள் உஹத் களத்திற்கு செல்லும் வழியில் தடையாக நின்றனர். உடனே நபியவர்கள், "எதிரிகளுக்கு அருகில் செல்லாமல் வேறு சுருக்கமான வழியில் யார் நம்மை உஹத் வரையிலும் அழைத்துச் செல்வார்கள்?'' என்று கேட்டார்கள்.

அப்போது அபூ கைஸமா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நான் அவ்வாறு அழைத்துச் செல்கிறேன்'' என்று கூறி, ஹாஸா கிளையினருக்கு சொந்தமான விவசாய நிலங்கள் வழியாகவும் அவர்களின் களத்து மேடுகளின் வழியாகவும் அழைத்துச் சென்றார். இவ்வாறு எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொண்டவர்களாகவும் தடைகளைத் தாண்டியவர்களாகவும் நபியவர்கள் உஹத் களத்தை நோக்கி முன்னேறிச் சென்றார்கள்.

முதலில் எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கு தயாரான மனோநிலை அவசியம். ஏனெனில் எதிரர்பாராத நிகழ்வுகள் எமது நம்பிக்கையிலும் மனோதைரியத்திலும் தாக்கம் செலுத்தக் கூடியவை. எதிர்பாராத நிகழ்வுகளால் நாம் மனம்


(9ஆம் பக்கம் பார்க்க...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி) www.aliaalif.tk

# பயமறியா போர்க் குதிரை



அல்குர்ஆனின் நூறாவது அத்தியாயமாக, அல்ஆதியாத் -அதிவேகமாக ஓடக் கூடியவை என்ற பெயரில் அல்லாஹ் ஒரு ஸூராவை இறக்கி வைத்துள்ளான். தப்ஸீர் அறிஞர்களின் கருத்துப்படி இது போர்க் குதிரைகளைப் பற்றிப் பேசுவதாகக் குறிப்பிடுவர். குதிரைகளிடமிருக்கும் பிரதானமான சில பண்புகளைப் பற்றி மேல்வாரியாக அல்லாஹ் இங்கே குறிப்பிட்டுள்ளான். அப்பண்புகளுடன் குதிரைகளிடம் இருக்கும் இறை அற்புதங்களையும் சற்று அறிந்து கொள்வோம்.

குதிரைகள் Equus ferus caballus எனும் பாலூட்டி இனத்தைச் சேர்ந்த ஒரு தாவர உண்ணியாகும். வரிக்குதிரை, கழுதை, கோவேறு கழுதை (Pony) என்பனவும் குதிரை வகையைச் சேர்ந்தவையாகும். குதிரைகள் பொதுவாக கறுப்பு, வெள்ளை, சாம்பல், சிவப்புடன் சேர்ந்த பழுப்பு என பல நிறங்களில் தனித்தனியாகவும் கலப்பு நிறங்களிலும் காணப்படுகின்றன. பொன் நிறத்திலும் அரிதாக குதிரைகள் பிறப்பதுண்டு.

குதிரைகளில் உயர் ரக, விலை மதிப்புள்ளவையாக வெள்ளை மற்றும் கறுப்பு நிறக் குதிரைகளும் வாட்ட சாட்டமான உடலமைப்பைக் கொண்டவையான குதிரைகளும் காணப்படுகின்றன.

மனிதர்கள் அநேகமாக செல்லப் பிராணியாக வளர்க்கும் நாய்களுக்கு அடுத்ததாக மனிதனோடு மிகவும் நெருக்கமான விசுவாசமுள்ள மிருகம் என்றால் அது குதிரைகள்தாம். தம் எஜமானுக்கு மிக்க நன்றியுணர்வுடன் அவை செயற்படுகின்றன. அண்மையில் Animal Planet என்ற தொலைக்காட்சி அலைவரிசை நடத்திய கருத்துக் கணிப்பின் பிரகாரம் 73 நாடுகளைச் சேர்ந்த 50,000 நேயர்களது நான்காவது மிகவும் விருப்பத்திற்கு உரிய விலங்காக குதிரையே தெரிவு செய்யப்பட்டிருந்தது. குதிரைகள் உட்பட கால்நடைகளை அல்லாஹ் எமக்கு வசப்படுத்தித் தந்துள்ளதாகவும் அவற்றின் பயன்பாடுகள் பற்றியும் அல்குர்ஆனில் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்:

"கால்நடைகளையும் அவனே படைத்தான். அவற்றில் உங்களுக்குக் கதகதப்புள்ள ஆடையணிகளும் இன்னும் (பல) பலன்களும் இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள். அவற்றை நீங்கள் மாலை நேரத்தில் (வீட்டுக்குத்) திரும்பி ஓட்டி வரும் போதும் காலை நேரத்தில் (மேய்ச்சலுக்காக) அவிழ்த்து விடும்போதும் அவற்றில் உங்களுக்குப் பொலிவும்) அழகுமிருக்கிறது. மேலும், மிக்க கஷ்டத்துடனன்றி நீங்கள் சென்றடைய முடியாத ஊர்களுக்கு அவை உங்களுடைய சுமைகளைச் சுமந்து செல்கின்றன. நிச்சயமாக உங்களுடைய இறைவன் மிக இரக்கமுடையவன், அன்பு மிக்கவன். இன்னும், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச் செல்வதற்காகவும் அலங்காரமாகவும் (அவனே படைத்துள்ளான்.) இன்னும், நீங்கள் அறியாத வற்றையும் அவன் படைக்கிறான்."

(அல்குர்ஆன் 16: 5-8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் வரலாறு முழுதும் பல்வேறு தேவைகளுக்காகக் குதிரைகளைப் பயன்படுத்தியுள்ளான். போக்குவரத்துக்காகவும் மேற்கு நாடுகளில் ஏர் பூட்டி உழுவதற்காகவும் பொதி மூட்டைகளைச் சுமந்து செல்வதற்காகவும் சில பகுதிகளில் உணவுக்காகவும் யுத்த நடவடிக்கைகளுக்காகவும் அலங்கார அணிவகுப்புகளுக்கும் இராணுவ நடிவடிக்கைகளுக்கும் பிற விலங்குகளை வேட்டையாடுவதற்கும் மந்தை மேய்ப்பில் ஈடுபடுவதற்கும் ஓட்டப் பந்தயங்களுக்கும் குதிரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றும் சில பின் தங்கிய நாடுகளில் குதிரைகள் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்று உலகில் சுமார் 100 மில்லியன் குதிரைகள் வேலைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஆபிரிக்காவில் மட்டும் 27 மில்லியன் குதிரைகள் அன்றாடத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்தோடு இதன் தசை, தோல், எலும்பு, உரோமம் மற்றும் பல் போன்ற பகுதிகள் வெவ்வேறு பொருட்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

உணவு மற்றும் விவசாய அமைப்பு (Food & Agriculture Organization) 2008 ஆம் ஆண்டில் வெளியிட்ட கணிப்பீட்டின்படி, அப்போது ஏறத்தாழ 60,000,000 இற்கும் அதிகமான குதிரைகள் உலகெங்கிலும் இருப்பதாக மதிப்பிட்டிருந்தது. இதில் அமெரிக்காவில் 33,500,000 உம் ஆசியாவில் 13,800,000 உம் ஐரோப்பாவில் 6,300,000 இருப்பதாகவும் ஆபிரிக்காவிலும் ஆசியாவிலும் குறைந்த அளவில் இருப்பதாகவும் அதன் அறிக்கை கூறுகின்றது. அமெரிக்காவில் உள்ள குதிரைகளைப் பராமரிக்க மட்டும் வருடாந்தம் 102 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாவதாக அமெரிக்கக் குதிரைகள் சங்கம் கருத்து வெளியிட்டிருந்தது.

ஸூரா அல்ஆதியாத்தின் முதல் ஐந்து வசனங்களிலும் போர்க் குதிரையின் பண்புகளைப் பற்றி பின்வருமாறு அல்லாஹ் சத்தியமிட்டுக் கூறுகின்றான். இப்பண்புகள் பற்றி சற்று விரிவாக பார்ப்போம்:


"மூச்சுத்திணற விரைந்து ஓடும் (குதிரைகள்) மீது சத்தியமாக பின்னர், (குளம்பை) அடித்து நெருப்புப் பறக்கச் செய்பவற்றின் மீதும் பின்னர், அதிகாலையில் விரைந்து (எதிரிகள் மீது) பாய்ந்து செல்பவற்றின் மீதும் அதனால் புழுதியைக் கிளப்புகின்றவற்றின் மீதும் அப்பால் (பகைப் படையின்) மத்தியில் கூட்டமாக நுழைந்து செல்பவற்றின் மீதும் சத்தியமாக." (100: 1-5)

### மிக வேகமாக ஓடும் ஆற்றல்

அதி வேகமாக ஓடும் விலங்குகள் வரிசையில் குதிரையும் பிரதான இடத்தை வகிக்கின்றது. குதிரை நேரான பாதையில் மணிக்கு 60 முதல் 80 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடியது. குதிரையின் உடற் தோற்றமே ஓடப் பிறந்தவை போன்று எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பதைக் காண முடியும். வேகமாக ஓடுவதற்கு ஏற்ற விதத்தில் அல்லாஹ் அவற்றின் கால்களை ஒழுங்கமைத்துள்ளான். இப்பாதங்கள் மூலம் மிக வேகமாக ஓடும் ஆற்றலை இவை பெற்றுள்ளன. மற்றைய விலங்குகள் போன்றல்லாது இவற்றின் கால் மூட்டுகளில் விசேடமான ஒரு தசை காணப்படுகின்றது. இது இவற்றின் வேகத்தை அதிகரிக்கவும் குறைக்கவும் வாகனங்களுக்கு உள்ள கியர் போன்று தொழிற்படுகின்றது.

இதனால்தான் 'மூச்சுத் திணற விரைந்தோடும் குதிரைகள் மீது' என அல்லாஹ் சத்தியம் செய்கின்றான். அவை அந்த கடுகதி வேகத்தில் ஓடும்போது குளம்புகள் நிலத்தில் பாறைகளில் மோதி உராயும்போது தீப்பொறிகள் பறப்பதாகவும் புழுதிகள் கிளம்புவதாகவும் அல்லாஹ் அவற்றின் ஓடும் திறனை வர்ணிக்கின்றான்.

### யுத்த களத்திற்கு மிகப் பொருத்தமான பிராணி



விலங்குகளில் யுத்த களத்திற்கு மிகப் பொருத்தமானவை குதிரைகள்தாம். அதனால்தான் வரலாற்று யுத்தங்களிலெல்லாம் குதிரைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பெரும் போர் ஆயுதமாகவும் அவை கருதப்பட்டுள்ளன. "உங்கள் குழந்தைகளுக்கு குதிரை ஓட்டும் கலையைக் கற்றுக் கொடுங்கள்" என்று நபியவர்கள் கூறியதும் இதன் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க் குதிரைகளுக்கு அச்சம் என்ற பண்பு காணப்படுவதில்லை. பொதுவாக நாய், யானை ஏன் ஒட்டகமும் கூட பெரும் சனத்திரளைக் காணும்போது மிரண்டு விடுகின்றன. அவற்றை நோக்கி கல்லையோ வேறு பொருளையோ ஓங்கினால் பின்வாங்கி விடுகின்றன. போர்க் களத்தில் இறந்த, வெட்டுண்ட உடல்கள் இருப்பதைக் கண்டால் இவை ஓட ஆரம்பித்து விடும். ஆனால் குதிரைகள் தம்மை நோக்கி அம்புகள் வருவதை அறிந்து கொண்டே தம்போன்ற எத்தனை குதிரைகள் செத்துக் கிடந்தாலும், எத்தனை பேர் வெட்டுண்டு கிடந்தாலும் அவற்றைக் கண்டு மிரளாது, அஞ்சாது எதிரிகளுக்குள் புகுந்து புகுந்து யுத்தம் செய்ய தன் எஜமானுக்கு உதவுகின்றன.

இதனால்தான், "அதிகாலையில் விரைந்து (எதிரிகள் மீது) பாய்ந்து செல்பவற்றின் மீதும் அப்பால் (பகைப் படையின்) மத்தியில் கூட்டமாக நுழைந்து செல்பவற்றின் மீதும்" என அல்லாஹ் சத்தியமிடுகின்றான்.

### நின்று கொண்டே தூங்கும் ஆற்றல் படைத்தவை

குதிரைகளின் மற்றுமொரு விஷேட பண்பு அவை நின்று கொண்டே தூங்கும் ஆற்றல் பெற்றவையாகும். கால் பாதங்களில் உள்ள சிறப்பான ஒரு பூட்டு (Lock) அமைப்பின் காரணமாக கீழே வீழ்ந்து விடாது நின்று கொண்டே தூங்குகின்றன. குதிரை ஒரு நாளைக்கு சராசரியாக 2 1/2 மணி நேரங்கள் வரை தூங்கும். மற்றும் ஒரு நாளில் நான்கில் இருந்து பதினைந்து மணி நேரம் வரை நின்று கொண்டே ஓய்வெடுக்கவும் செய்யும். அத்தோடு களைப்பு ஏற்பட்டால் கனைத்துக் கொண்டே ஒரு முறை நிலத்தில் படுத்து உருண்டு எழுந்து நின்று கொள்ளும். அவ்வளவுதான் களைப்பு அசதி என்பன தீர்ந்து விடும். பொதுவாக நாம் கதிரையிலோ, தரையிலே அமர்ந்து கொண்டு தூங்கும்போது எமது கழுத்து எம்மை அறியாமலேயே கீழ்நோக்கிச் சாயும். ஆனால் இவற்றின் கால்கள் போன்றே தலையும் கீழே சாயாது அப்படியே இருக்கும் விதமாக அல்லாஹ் படைத்துள்ளான். எனவே, திடீரென எதிரிப்படை தாக்க வந்தாலும் இவை நின்று கொண்டே தூங்கும் ஆற்றல் உள்ளதால் எழுப்பி, தயார்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை. உடனே, யுத்தகளத்திற்குச் சென்று விடலாம்.

### வெப்ப, குளிர் காலங்களுக்கு இயைபடையும் உடலமைப்பு

யுத்தங்கள் எப்போது வேண்டுமானாலும் வரும். அது குளிர் காலமாகவும் இருக்கும் வெப்ப காலமாகவும் இருக்கும். குளிர்ப் பிரதேசம், பாலைவனம் போன்று எந்தப் பிரதேசமாகவும் இருக்கும். எனவே, இவற்றுக்கு ஏற்றாற்போல் தனது உடலைத் தற்காத்துக் கொள்ள அல்லாஹ் அவற்றின் உடலில் காணப்படும் உரோமங்களை அமைத்துள்ளான். இவற்றின் உடலில் காணப்படுகின்ற முடி அல்லது உரோமங்கள் மிகவும் அதிசயமானவை. இவை வெப்பத்தையும் குளிரையும் சமநிலைப்படுத்தும் கருவியைப் (Thermostat) போன்று செயற்படுகின்றன. குதிரைகளின் உடல் வெப்பம் தொடர்ந்தும் 38 பாகை சென்டிகிரேடில் பேணப்படல் வேண்டும். அப்போதுதான் இயல்பாக ஆரோக்கியமாக இவற்றால் வாழ முடியும். எனவே, வெப்ப காலங்களில் இவற்றின் உடலில் உள்ள உரோமங்கள் உதிர்ந்து விடுகின்றன. அவ்வாறே குளிர் காலங்களில் அவற்றின் உரோமங்கள் நீண்டு, அடர்த்தியாக வளர்கின்றன. இதன் மூலம் அவற்றின் உடல் வெப்ப நிலை சமதளத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

### கால் குளம்புகளது அமைப்பு


குதிரையின் கால்களும் குளம்புகளும் மிக முக்கியமானவையாகும். குளம்பின் வெளிப் பகுதி எமது விரல் நகங்கள் அமையப் பெற்றுள்ள பதார்த்தம் போன்ற கடினமான ஒன்றால் ஆனதாகும். காடுகளில் உள்ள குதிரைகள் சுயாதீனமாக இருப்பதால் இவை அதிகளவில் தேய்வடைவதில்லை. ஆனால், மனிதனால் வளர்க்கப்படும் குதிரைகள் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் அவற்றின் குளம்புகள் தேய்வடைகின்றன. எனவேதான் அதனைத் தடுக்க இரும்பினாலான லாடங்கள் பொருத்தப்படுகின்றன. குதிரை வளரும்போது குளம்பும் சேர்ந்து வளர்வதால் குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு முறை லாடங்களை மாற்ற வேண்டி ஏற்படுகின்றது. இரும்பினாலான லாடங்கள் பொருத்தும்போது குதிரைகள் கடுமையான வேதனையை அனுபவிக்கின்றன. ஆனால் ஓடுவதற்கும் பாய்வதற்கும் பாரங்களைச் சுமப்பதற்கும் இந்த லாடங்கள் மிகவும் அவற்றுக்கு உதவுகின்றன.

### கூர்மையான உணர்திறன்

சிறந்த உணர்திறன் கொண்டவைதான் குதிரைகள். ஏதும் ஆபத்துக்கள் நெருங்கும்போது முன்னரே அறிந்து கொள்ளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலை அல்லாஹ் இவற்றுக்கு வழங்கியுள்ளான். தரையில் வாழும் பாலூட்டி விலங்குகளில் குதிரையின் கண்களே



பெரியவையாகும். இவற்றின் இரு கண்களாலும் 65 பாகைக் கோணத்திலும் ஒரு பக்கக் கண்ணால் மட்டும் 350 பாகைக் கோணத்திலும் உள்ளவற்றைச் சுற்றிச் சுற்றிப் பார்க்க முடியும். பகலில் மட்டுமன்றி இரவிலும் நன்றாகப் பார்க்க பார்வைத் திறன் இவற்றுக்கு உண்டு. கண்களைப் போன்றே குதிரைகளின் காதுகளும் நன்கு கூர்மையாக இருக்கும். தமது தலையைத் திருப்பாமலேயே செவிமடல்களை 180 பாகை வரை திருப்பி சப்தம் எங்கிருந்து வருகின்றது என்பதைத் துல்லியமாக அறிந்து கொள்கின்றன. மட்டுமன்றி கனைப்பதன் மூலம் தனது எஜமானுக்கு அபாய எச்சரிக்கையையும் வழங்குகின்றன.

குதிரைகள் 30 முதல் 40 வருடங்கள் வரை உயிர் வாழ்கின்றன. பெண் குதிரைகள் சுமார் 340 நாட்கள் பெண் குதிரை கருத்தரித்திருக்கும். அதன் பின் குட்டிக் குதிரை பிறக்கும். பிறந்து சிறிது நேரத்திலேயே குட்டி எழுந்து நடக்க ஆரம்பித்து விடுகின்றது. குதிரைகள் தமது பிறப்பிலிருந்து ஐந்து ஆண்டுகளில் இனப் பெருக்கத்துக்குத் தயாராகி விடுகின்றன.

**இறைவன் கூறும் பாடம்**

ஸூரா அல்ஆதியாத்தின் முதல் ஐந்து வசனங்களிலும் குதிரையைப் பற்றி அவை தனது எஜமானுக்கு எவ்வளவு நன்றியுணர்வுடன் செயற்படுகின்றது என்றும் அவனைத் தனது உடலில் சுமந்து கொண்டு தான் செத்தாலும் பரவாயில்லை என்று எதிரிகளுக்கு மத்தியில் பயமின்றி நுழைந்து யுத்தம் செய்ய உதவுகின்றது, எஜமானைப் பாதுகாக்கின்றது. இதனையெல்லாம் எஜமான் போடும் ஒரு பிடி கொள்ளிற்காகவே குதிரை செய்கின்றது. ஆனால், மனிதனுக்கு அல்லாஹ் எண்ணிலடங்காத அருட்கொடைகளைக் கொடுத்தும் அவன் அல்லாஹ்வுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான். உலக வாழ்வில் மூழ்கியிருக்கின்றான் என்பதை அடுத்து வரும் வசனங்கள் குறித்துக் காட்டுகின்றன. இதற்கு மனிதன் மறுமையில் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்பதையும் அறிவிக்கிறது.

“மூச்சுத் திணற விரைந்து ஓடும் (குதிரைகள்) மீது சத்தியமாக பின்னர், (குளம்பை) அடித்து நெருப்புப் பறக்கச் செய்பவற்றின் மீதும், பின்னர், அதிகாலையில் விரைந்து (எதிரிகள் மீது) பாய்ந்து செல்பவற்றின் மீதும் அதனால் புழுதியைக் கிளப்புகின்றவற்றின் மீதும், அப்பால் (பகைப் படையின்) மத்தியில் கூட்டமாக நுழைந்து செல்பவற்றின் மீதும் சத்தியமாக. நிச்சயமாக, மனிதன் தன் இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கின்றான். அன்றியும், நிச்சயமாக அவனே இதற்குச் சாட்சியாகவும் இருக்கின்றான். இன்னும், நிச்சயமாக அவன் பொருளை நேசிப்பதில் அளவு கடந்தே இருக்கின்றான். அவன் அறிந்துகொள்ளவில்லையா? கப்றுகளிலிருந்து, அவற்றிலிருப்பவை எழுப்பப்படும்போது மேலும், இதயங்களில் உள்ளவை வெளியாக்கப்படும்போது நிச்சயமாக, அவர்களுடைய இறைவன் அவர்களைப் பற்றி, அந்நாளில் நன்கறிந்தவன்.” (100:1-11)

ஸீரா... (05ஆம் பக்கத் தொடர்...)

தளர்ந்தால் அதன் பின்னர் எம்மால் எந்தவொரு தீர்மானத்தையும் மேற்கொள்ள முடியாமல் போய்விடும். நிதானித்து தீர்மானம் மேற்கொள்ளாவிட்டால் நாம் எதிர்பாராத அந் நிகழ்விலிருந்து மீண்டு அடுத்த கட்டத்திற்கு நகர முடியாமல் தோற்றுவிடுவோம். எனவே, எதிர்பாராத நிகழ்வுகளை எதிர்கொள்வதற்குத் தயாரான மனோநிலையுடனும் தளராத உறுதியுடனும் அசைக்க முடியாத நம்பிக்கையுடனும் நாம் பயணிப்பது வெற்றிக்கு வழியாகும். திட்டமிடுகின்றபோது இவ்வாறு எதிர்பாராத நிகழ்வுகள் நிகழ்வுறும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அவற்றை எதிர்கொள்வதற்குத் தயாரான மனோநிலையில் திட்டமிடுவோம், வெற்றி பெறுவோம், இன்ஷா அல்லாஹ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உலகில் மிகப் பெரியவை

- உலகில் மிகப் பெரிய தீவு - கிறீன்லாந்து
- உலகில் மிகப் பெரிய கடல் - பிலிப்பைன்ஸ் கடல்
- உலகில் மிகப் பெரிய விரிகுடா - ஹட்சன் விரிகுடா
- உலகில் மிகப் பெரிய கண்டம் - ஆசியாக் கண்டம்
- உலகில் மிகப் பெரிய சமுத்திரம் - பசுபிக் சமுத்திரம்
- உலகில் மிகப் பெரிய வளைகுடா - மெக்சிகோ வளைகுடா
- உலகில் சனத்தொகை கூடிய நாடு - சீனா



ஆர்.எப். அஸ்லா
தரம் - 09
பாத்திமா பா.மு.வி, புத்தளம்




1. உலக நீர்த்தரைப் பரப்பு தினம் - பெப்ரவரி 02
2. சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08
3. உலக நுகர்வோர் தினம் - மார்ச் 15
4. உலக நீர்வள தினம் - மார்ச் 22
5. உலக கயரோக தினம் - மார்ச் 24
6. உலக சுகாதார தினம் - ஏப்ரல் 07
7. உலக புவி தினம் - ஏப்ரல் 22
8. உலக நூல் பதிப்புரிமை தினம் - ஏப்ரல் 23
9. சர்வதேச தொழிலாளர் தினம் - மே 01
10. உலக பத்திரிகைச் சுதந்திர தினம் - மே 03
11. உலக செஞ்சிலுவை/ செம்பிறை தினம் - மே 08
12. உலக தொலைத்தொடர்பு தினம் - மே 17
13. உலக தபால் தினம் - ஒக்டோபர் 09
14. சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் - ஒக்டோபர் 15
15. உலக சிக்கன தினம் - ஒக்டோபர் 31

ஏ.டப்ளியு.எம். ஹுமைஸ்
தரம் - 11
அக்/ பொத்துவில் ம.க., பொத்துவில்



## அறிவுக்கு விருந்து

1. இலங்கையின் அதி நீளமான நதி - மகாவலி கங்கை (330 கிலோ மீற்றர்)
2. இலங்கையில் அதிகுளிரான இடம் - கந்தப்பளை
3. இலங்கையை முதன் முதலில் கைப்பற்றிய அந்நியர் - போர்த்துக்கேயர்
4. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - நுவரெலியா
5. தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம் - தலவாக்கலை
6. இலங்கையின் தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
7. இலங்கையின் கட்டிப்பால் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் - பொலன்னறுவை
8. இலங்கையில் புற்றுநோய் வைத்தியசாலை அமைந்துள்ள இடம் - மஹரகம
9. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை
10. இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி - பம்பரகந்த (240 மீற்றர்)
11. இலங்கையின் உயரமான அணைக்கட்டு - விக்டோரியா
12. இலங்கை அமைந்துள்ள கண்டம் - ஆசியா
13. இலங்கையில் உள்ள இயற்கை வனம் - சிங்கராஜ வனம்
14. இலங்கையின் அயல் நாடு - இந்தியா
15. இலங்கையில் இரத்தினக் கல் கிடைக்கும் இடம் - இரத்தினபுரி

பாத்திமா இஹ்ஸானா
அல்லை நகர் - 6
தோப்பூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும்

# நபிகளார் வரைந்த நிருபங்கள்

| நிருபத்தை எடுத்துச் சென்றவர் | நாடு | மன்னர் / தலைவர் |
|---|---|---|
| அம்ர் பின் உமையா அல்அள்ளம்ரி | அபீசீனியா | நஜ்ஜாஸி |
| அலாவு பின் அல்ஹள்ரமி | பஹ்ரைன் | முன்திர் பின் ஸாவா |
| அப்துல்லாஹ் பின் ஹுதாஃபா அஸ்ஸஹ்மி | (தைஸபூன்) மதாயின் | கிஸ்ரா |
| திஹ்யா அல்கல்பி | இஸ்கண்டரியா மகூகஸ் | (எகிப்து மன்னர்) |
| அம்ரு பின் ஆஸ் | ஓமான் | ஜஃபர்அப்து |
| கலைத் பின் அம்ரு அல்ஆமிரி | அல்யமாமா | ஹவ்தா பின் அலி |
| ஷுஜாவு பின் வஹ்ப் அல் அஸதீ | கௌத்தா திமிஷ்க் | அல்ஹாரிஸ் பின் அபீ ஸம்ர் |

எம்.ஏ.எப். ஹபீலா
பாத்திமா ஸஹ்றா பெ.அ.க.
ஓட்டமாவடி

# கண்டுபிடிப்புக்களும் விஞ்ஞானிகளும்


| | |
|---|---|
| புவியீர்ப்புக் கொள்கை | – நியூட்டன் |
| கலன்கள் | – றொபட் ஹூக் |
| நுணுக்குக் காட்டி | – ஜெக்சன் |
| மின்காந்த தூண்டல் விதி | – மைக்கல் பரடே |
| நான்கு குருதி வகைகளையும் கண்டுபிடித்தவர் | – கார்ல் லான்ஸ்ரைனர் |
| X கதிர் அட்டவணையைக் கண்டறிந்தவர் | – வில்லியம் றொன்ஜன் |
| ஆவர்த்தன அட்டவணையைக் கண்டறிந்தவர் | – மெண்டலிவ் |
| இறப்பரை வல்கனைசுப் படுத்தும் நுட்பம் | – சிரகர் மெண்டலிவ் |
| இயற்கைத் தேர்வுக் கொள்கை (கூர்ப்பு) | – சாள்ஸ் டார்வின் |
| எளிய இரசப் பாரமானி | – றொலி சொலியர் |
| மிதப்பு விதி | – ஆக்கிமிடிஸ் |
| எளிய மின்கலம் | – அலெக்ஸாண்டர் |
| இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் | – வில்லியம் ஹார்வே |
| ஒட்சிசன் | – ஜோஸப் பிரீஸ்லீ |
| ஸ்டெதஸ்கோப் | – லயினக் |
| துப்பாக்கி ரவை | – ரோஜர் பேகன் |
| பிளேக் கிருமி | – கிட்டாஸ் றோ |





பாத்திமா பஹாமா நளீர்
தரம் 11
பேருவளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சர்வதேசக் குறியீடுகள்



- வெண் புறா - அமைதி, சமாதானம்
- ஒலிவ் மரத்து இலை - சமாதானம்
- மஞ்சள் கொடி - தொற்று நோய்
- கறுப்புக் கொடி - எதிர்ப்பு, சோகம், மரணம்
- அரைக் கம்பத்தில் கொடி - துக்கம்
- சிவப்பு விளக்கு - மருத்துவமனை, ஆபத்து
- செஞ்சிலுவை - மருத்துவ உதவி
- கண் கட்டப்பட்டு கையில் தராசு வைத்திருக்கும் பெண் - நீதி
- உடைந்த கைவிரலுடன் இரு கைகள் - விடுதலை
- சுட்டு விரலும் நடுவிரலும் சேர்ந்து V அடையாளம் - வெற்றி
- தலை கீழான கொடி - துன்பம்
- தீப்பந்தம் - ஒலிம்பிக்

எம்.எஸ். அஷ்பாக் ஜாவித்
தரம் - 10
கமு/அல்மனார் மத்திய கல்லூரி
மருதமுனை

## முதியோருக்கு மரியாதை



ஒருநாள் சபையில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அபூ பக்ர், உமர், உமர் இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹும்) போன்ற ஸஹாபிகளும் அமர்ந் திருந்தார்கள். அப்பொழுது நபியவர்கள் தமது தோழர்களிடம் விடுகதையைப் போன்று ஒரு வினாவைக் கேட்டார்கள்.

அது என்ன வினாவாக இருக்கும்? அது ஒரு மரத்தைப் பற்றியதாகும். நபியவர்கள் அம்மரத்தைப் பற்றி பின்வருமாறு வர்ணித்தார்கள்:

- இது ஒரு முஸ்லிமுக்கு உதாரணமாகும்.
- இது எமது ஏக இறைவனின் கட்டளைப்படி எல்லாக் காலங் களிலும் கனிகளைக் கொடுக்கும்.
- இதனது இலைகள் உதிர்வதுமில்லை.

அது என்ன மரம்? எனக் கேட்டார்கள். சபையில் இருந்த அபூ பக்ர், உமர், இப்னு உமர் (ரழியல்லாஹு அன்ஹும்) ஆகிய மூவரும் அமைதியாக இருந்தனர். இருந்தபோதிலும் இப்னு உமருக்கு அந்த மரம் 'பேரீத்த மரம்' என மனதில் தோன் றியது. ஆனாலும் அவர் சபையில் முண்டி அடித்துக் கொண்டு பதில் கூற முன்வரவில்லை. இறுதியில் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களே 'பேரீத்தம் மரம்' எனப் பதில ளித்தார்கள். (ஸஹீஹுல் புஹாரி, முஸ்லிம்)

அதன் பின்னர் இச்சபை கலைந்து இம் மூவரும் எழுந்து வந்தனர். அவ்வேளை இப்னு உமர் தனது தந்தை உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம், "தந்தையே! நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இவ்வி னாவைக் கேட்டதும் எனக்கு மனதில் பேரீத்த மரம் என்று தோன்றியது" என்றார். உடனே உமர் (ரழியல்லாஹு அன்ஹு), "விடை தெரிந்தும் ஏன் கூறவில்லை?" என வினவி னார். அதற்கு இப்னு உமர், "தந்தையே எனக்கு மூத்தவர் களான நீங்களும் அபூ பக்ரும் அமைதியாக இருந்தீர்கள். உங்களை மீறி எவ்வாறு பதிலளிப்பது?" என்று தனது தந்தைக்குப் பணிந்தவராகக் கூறினார். அதனைக் கேட்டதும் உமர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி யடைந்தார்கள். தனது மகன் பணிவு, மரியாதை, அவைய டக்கம், ஒழுக்கம் போன்ற உயர் பண்புகள் பயின்றவராக வளர்வதைக் கண்ட எந்தத் தந்தைதான் மகிழ்ச்சியடையாமல் இருப்பார்!?

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"நம்மில் முதியவருக்கு மரியாதை செய்யாதவனும் சிறியவருக்கு இரக்கம் காட்டாதவனும் என் உம்மத்தைச் சார்ந்தவனல்ல." (ஸுனன் அஹ்மத்)

ஏ.எல்.எப். லரீபா
அலகப்பெருமகம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகரம்



## பொது அறிவு

எச்.எம். பாத்திமா
தம்பாளை

| | |
|---|---|
| உலகில் வறுமையான நாடு எது? | ருவான்டா |
| உலகில் மிக அதிகமாக மின்னலால் பாதிக்கப்படும் நாடு | பனாமா |
| ஆட்சி மாற்றம் இல்லாத நாடு | மெக்ஸிகோ |
| விவாகரத்து செய்ய முடியாத நாடு | அயர்லாந்து |
| வேர் இல்லாத தாவரம் | இலுப்பை |
| ஒருபோதும் பூக்காத தாவரம் | அத்திப்பூ |
| பத்திரிகை வெளிவராத நாடு | திபெத் |
| தனக்கென தாய் மொழி இல்லாத நாடு | சுவிட்சர்லாந்து |
| பழைமை வாய்ந்த செய்தி நிறுவனம் | ரொய்ட்டர் |
| ஒரே நாடாக இருக்கும் ஒரு கண்டம் | அவுஸ்திரேலியா |
| உலகில் மிகப் பழைமையான பாராளுமன்றம் உள்ள நாடு | ஐஸ்லாந்து |
| கடல் மட்டத்துக்கு கீழே உள்ள நாடு | டென்மார்க் |
| படகு வடிவில் அமைந்துள்ள நாடு | இத்தாலி |
| கண்ணாடித் தொழிலுக்கு பெயர் பெற்ற நாடு | பெல்ஜியம் |
| வாடகைக் கார்கள் அதிகம் உள்ள நாடு | மெக்ஸிகோ |
| உலகில் பெரிய பங்குச் சந்தை | நியூயோர்க் |

## விஞ்ஞானத் தகவல்கள்

- கோள்களில் மிகவும் குளிரான கோள்
  – **நெப்டியூன்**
- உடுக்களில் மிகவும் ஒளிர்வு கூடிய உடு
  – **அல்பா**
- அல்மகெஸ்ட் (Almogest) எனும் நூலை எழுதிய விஞ்ஞானி –
  **குளோடியஸ் தொலமி**
- அதிக துணைக் கோள் உள்ள கோள்
  – **வியாழன்**
- அண்மையில் ஞாயிற்றுத் தொகுதியில் இருந்து விலக்கப்பட்ட கோள்
  – **புளூட்டோ**
- ஞாயிற்றுத் தொகுதியில் சிறிய கோள்
  – **சனி**
- செந்நிறக் கோள்
  – **செவ்வாய்**
- பூமிக்கு அண்மையில் உள்ள உடு
  – **புரக்சிமா சென்ரோறி**
- புவி கோள வடிவானது என முதன் முதலில் கூறியவர்
  – **பைதகரஸ் (கிரேக்கம்)**
- நவீன வானியல் விஞ்ஞானத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர்
  – **கலிலியோ கலீலி (இத்தாலி)**

ஏ. அஸ்வர்
தரம் – 10
சிறாஜ் அ.க, ஓட்டமாவடி

## நாடுகளின் தேசிய விளையாட்டுக்கள்



இந்தியா – கபடி

ஜப்பான் – கராத்தே





ஸ்பெயின் – ஜல்லிக்கட்டு

பாகிஸ்தான் – ஹொக்கி






துருக்கி – மல் யுத்தம்

ஸ்கொட்லாண்டு – கால்பந்து





இலங்கை – கரப்பந்து

அவுஸ்திரேலியா – கிரிக்கட்



ஆர்.எப். அஸ்கா,
தரம் – 09,
பாத்திமா. மு.ம.வி, புத்தளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# "How much do you know?"

## Assalamu alaikum dear friends,

**Have you ever owned a pet?**

Having a pet is a very interesting hobby. What are the animals and birds that are used as pets?

**Squirrels, cats, ornamental fish, rabbits, hens, parrots, pigeons, love birds, tortoise ......**



So which one would you pick out of them?

The prophet (SAW) was kind to the animals, so we should also take care of them with love and affection.

- So let's talk to some friends about their 'pet experience'

**Aathif says**

"I have two gold fish. I often feed those hungry fish with fish food, they play in my little tank. My tank is like a small pond, in which I have shells, water plants and an oxygen pump. My friends visit my fish, and we enjoy it a lot"

We have some tips for Aathif.

1. Keep your tank away from direct sunlight
2. Change water at least once a week. Use a 'gravel cleaner'.
3. Give them the right food. But do give too much. Giving the right amount of good food will improve the quality and colour of your fish.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Samantha has some thing to say about her cats

"I had only one cute cat. But now, it's a small family of three little kittens, and the mother. They are like a bundle of cotton wool. I take much care of them. They sleep with their mom, on the cushion bed on our front hall. They love milk and fish"





**Samantha, we have few tips for you too.**


1. Communicate with your cat, like with a child.
2. Cats are self cleaning animals, but make sure you wash them, too.
3. Praise them when they are good.

So friends, raising pets is a responsible job. You should make sure the well being of the animals. Read a lot, and find details, before you get into this job.

**All the best!**


# Pet facts


- Some people have strange, unusual pets. They are known as 'EXOTIC PETS'.
- Did you know that many kids around the world have OWLS as their pet after the famous book series 'Harry Potter'?
- The reason behind this is , that the hero of the novel 'Potter' had an owl as his pet !
- Rearing fish gives a very good exercise for your eyes, and it's good for your heart, too.



## Some very good books for pet lovers

1. Top Kids Books on Pets and Animals
2. Does Your Kid Have a Pet?
3. The Perfect Pet
4. Learn More About Your Pets
5. Cat in the Hat's Kids Book on Pets







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## Your corner



Allah made all the living things. Some of us have pets. Those pets are also like us. We should not hit or hurt them.... We should love them as loging people. Once a lady did not allow her pet to search food. She tied her cat tightly , and never gave food to eat. So the cat died. The prophet said, that this woman went to hell because of this. Another man , was thirsty, and he saw a well with water. when he was drinking water, a dog came in search of water. So this man took some water to his slipper and gave the dog. The dog drank water from it. The man went to heaven because of this. Did you see, how important is it to love animals?

# Be kind to animals

**Razeena Banu, Grade-06**
**Malwana International School**
**Malwana**



**K.Z.Hafsha**
**Grade-06**
**B/Al-Ilma M.V**
**Gurutalawa**

## Names of young ones

| Animal | Young one |
|---|---|
| Duck | Duckling |
| Frog | tadpole |
| Goat | kid |
| Hare | leveret |
| Bear, fox, lion, tiger, cat | cub |
| Cow, elephant | calf |
| Deer, stag | fawn |
| Dog | puppy |
| Hen | chicken |
| Sheep | lamb |

## A request from mail

**Dear sir,**

I'm a student who will sit O/L exam this year. Aharam book is very important to students like me. I do your questions every month. But please give the answer for the questions every month .You give answer for history. But don't give answer for maths and science. They are very useful questions. so please give the answers every month in Aharam magazine.

**Thank you**
**Fathima Hasna**




I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella


Or

Mail me to
aharamenglish@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோல்வியில் கண்ட வெற்றி...



தோமஸ் அல்வா எடிசன், குடும்பத்தில் 7வது குழந்தை. அவருக்கு 4 வயது வரை பேச்சு வரவே இல்லை. குறுகிய காலம் வரைதான் பாடசாலைக்குச் சென்றார். 12 வயதில் சம்பாதிக்க முடிவு செய்தார். ஓடும் ரயில்களில் பழங்களையும் இனிப்புக்களையும் விற்க ஆரம்பித்தார். அவருடைய ஹீரோ அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன். பத்திரிகையில் ஜனாதிபதி வேட்பாளரைப் பற்றி அழுத்திச் சொல்லி கொஞ்சம் கொஞ்சமாக பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார். இத்தனையும் அவரது இலட்சியத்தை அடையத்தான். மெல்ல மெல்ல ஆய்வுகூடம் வீட்டில் உருவாகின்றது. ஆராய்ச்சிகளும் நடந்தன.

16 வயதில் ஒரு வேலை கிடைத்தது. அதன் சம்பளத்தையும் ஆராய்ச்சிக்கே செலவளித்தார். தளராத மனம் உயரிய இலட்சியத்தை அடையும் வண்ணம் தினமும் மெருகூட்டிக் கொண்டிருந்தது. விஞ்ஞானம் என்றாலே அவருக்கு மிகவும் பிடிக்கும். 'விஞ்ஞான தலைநகரம்' என்றழைக்கப்படும் பொஸ்டனுக்குச் செல்ல அவருக்கு ஆசை. ஆசையும் நிறைவேறியது. பல மைல்களுக்கு அப்பால் சென்ற எடிசன், பொஸ்டனில் தினமும் 12 மணி நேர வேலை செய்தார். விடுமுறை நாட்களில்கூட அவரது ஆராய்ச்சி நிற்கவில்லை.

இரவு பகல் பாராது உழைத்து முதன் முதலாக மின்சார வாக்குப் பதிவு இயந்திரத்தைக் கண்டு பிடித்து பேற்றன்ற் (அனுமதிப் பத்திரம்) பெற்றார். இந்த காலகட்டத்தில்தான் அவரது கஷ்டத்துக்கு விடிவு கிடைத்தது. ஒரு பெரிய நிறுவனம் அவரது கண்டுபிடிப்பை 40,000 டொலர் கொடுத்து வாங்கியது. முதன் முதலாகப் பெருந் தொகைப் பணத்தைப் பார்த்த அவர் அசந்து போனார். இரவில் உட்கார்ந்து பணத்தை எண்ணி எண்ணியே சந்தோஷப்பட்டார். உடனே, தன் வீட்டுக்கு நான் சம்பாதிக்கிறேன் எனக் கடிதம் அனுப்பினார்.

அதனைத் தொடர்ந்து தொடராக பல கண்டு பிடிப்புக்களை உலகிற்கு வழங்கினார். 85 வயதிற்குள் 1094 பேற்றன்களைப் பதிவு செய்தார். எத்தனையோ அதிசய கண்டுபிடிப்புக்கள் அதற்குள் இருந்தன. பள்ளிப் படிப்பு இல்லாமல் பொருளாதார கஷ்டத்துக்கு மத்தியில் பல நூறு தடைகளையும் தாண்டி எடிசனுக்கு சாதிக்க முடிந்தது. அவர் அடிக்கடி Genious = Inspiration 1% + Perspiration 99% என்று சொல்வார்.

வெற்றியின் இரகசியம் அவர் மனதுக்குள் ஒளிந்திருந்தது. அது வேறொன்றுமில்லை. ஒவ்வொரு தோல்வியிலும் ஒவ்வொன்றைக் கற்றுக் கொள்வாய் என்ற மாபெரும் நேர் சிந்தனை அவருக்குள் இருந்தது. இது அவரை பெரும் விஞ்ஞானியாக மாற்றியது.

மின்குமிழைக் கண்டுபிடிப்பதற்காக எத்தனையோ சோதனைகளைச் செய்தார். ஆரம்பத்தில் அத்தனையும் தோல்விதான். ஒவ்வொரு பொருட்களையும் உலோகங்களையும் வைத்துப் பார்த்தார். ஒன்றுமே பயனளிக்கவில்லை.

ஒரு நாள் அவருடைய நண்பர் ஒருவர், "பரிசோதனைக்கு எத்தனை பொருட்களைப் பயன்படுத்தியிருப்பாய்?" என்று கேட்டார். கொஞ்சமும் கூட களைப்படையாதது போன்று, "1000க்கு மேல்" என்று பதில் கொடுத்தார். "ஓ! அவ்வளவும் வீணாச்சா?" என்று நண்பன் கேட்க, எடிசன் அவரை தட்டிச் சொன்னார். "நான் கண்டு பிடித்திருக்கிறேன்; 1000க்கு மேற்பட்ட இந்தப் பொருட்களால் மின் குமிழ் தயாரிக்க முடியாதென்று" Positive ஆகச் சொல்லி நண்பனை அசத்தி விட்டார். இதுதான் அவர் தோல்வியில் கண்ட வெற்றி.

ரபாய் ரயீசா நுஸ்ரத்
03ம் வருடம்
பாத்திமா ஸஹ்றா பெ.அ.க. - ஓட்டமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

# வரலாறு



கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## தரம் – 10

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1. பிந்திய வேதகாலம் என்பது
   i. ஆரியர் மத்திய ஆசியாவில் இருந்த காலம்
   ii. ஆரியர் இந்தியாவுக்கு வந்த காலம்
   iii. ஆரியர் இந்தியாவில் பரவத் தொடங்கியதன் பின்னரான காலம்
   iv. மகதப் பேரரசு எழுச்சியடைந்த காலம்

2. ஆரியரின் வர்ணப் பாகுபாட்டிற்குப் பொருத்தமற்ற ஒரு விடை.
   i. மன்னன் சத்திரிய குலத்தினுள் உள்ளடங்குவான்.
   ii. வைசியர் சாதாரண தொழில்களைச் செய்வர்.
   iii. பிராமணர் கல்வி கற்பிப்பர்.
   iv. ஏனைய மூன்று குலத்தவருக்கும் கல்வி கற்கும் உரிமை இருந்தது.

3. சோமபானம் என்பது
   i. இலைச்சாற்றைப் பிழிந்து ஆரியர் தயாரித்த ஒரு பானம்
   ii. ஆரியர் தெய்வத்திற்குப் படைத்த புனித பானம்
   iii. வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் அருந்திய ஒரு பானம்
   iv. தேவர்கள் அருந்திய பானம்

4. A அசோகன்　　B சந்திரகுப்த மௌரியன்
   C பிம்பிசாரன்　　D அகாதசத்ரு
   காலத்திற்கேற்ப இம்மன்னர்களை ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை.
   i. BDAC　　ii. BADC
   iii. BDCA　　iv. ADBC

5. பிந்துசார மன்னனின் காலத்தில் இந்தியாவில் வாழ்ந்த ஒருவர் அறிந்திருக்க முடியாத ஒரு விடயம்.
   i. மகா அலெக்சாந்தர் பஞ்சாப்பை ஆக்கிரமித்தமை
   ii. மூன்றாம் பௌத்தப் பேரவை கூட்டப்பட்டமை
   iii. புத்தர் பரிநிர்வாணம் அடைந்தமை
   iv. மகாபத்த நந்தன் ஆட்சி செய்தமை

6. மௌரிய அரச சபையில் பயன்படுத்தப்பட்ட மொழி
   i. பிராகிருதம்　　ii. சமஸ்கிருதம்
   iii. மகதமொழி　　iv. பிராமிமொழி

7. மௌரியர் காலத்தில் பிரதேச நிருவாக அலகு எப்பெயரினால் அழைக்கப்பட்டது?
   i. இராஜமத்தி　　ii. ஆயுக்தி
   iii. வலஹி　　iv. புக்தி

8. 'வரலாற்றுக்கு முற்பட்ட மனிதன் உப்பைப் பயன்படுத்தினான்' என்பதற்கான ஆதாரம் எக்குகையில் கிடைத்துள்ளது?
   i. கித்துல்கல குலை
   ii. பட்டதொம்ப குகை
   iii. பெலியன் குகை
   iv. பாகியன்கல குகை

9. எந்த நகரில் நடைபெற்ற விழா ஒன்றில் விஜயன் இயக்கர் குலத்தவரைக் கொன்றான்?
   i. கிரிசவத்துபுற　　ii. உருவெல
   iii. உதயன　　iv. மகிந்தபுர

10. கலாஓயாவின் பழைய பெயர்.
   i. ஜஜ்ஜர நதி　　ii. கதம்ப நதி
   iii. கோண நதி　　iv. கல்கா நதி

11. உபதிஸ்ஸகம எந்த நதிக்கு அண்மையில் அமைக்கப்பட்ட குடியிருப்பாகும்?
   i. கல்ஓயா　　ii. மாணிக்க கங்கை
   iii. கிருண்டி ஓயா　　iv. மல்வத்து ஓயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பண்டுகாபய மன்னனோடு தொடர்பற்ற ஒரு விடயம்.

i. நகரகுத்திகன் பதவிக்கு அபய இளவரசனை நியமித்தான்.

ii. முதலாவது பௌத்த விகாரையை அமைத்தான்.

iii. 70 ஆண்டுகள் ஆட்சி செய்தான்.

iv. முதலாவது தலைநகரத்தை உருவாக்கினான்.

13. துட்டகைமுனுவின் ஆட்சி எத்தனை வருடங்கள் இடம்பெற்றது?

i. 24 ii 70 iii. 40 iv. 44

14. துட்டகைமுனுவினால் கட்டப்படாத ஒரு கட்டடம்.

i. மிரிசவட்டி ii. ருவன்வெலிசாய
iii. ஜெத்தவன ராமய iv. லோவமகாபாய

15. A கோத்தாபய மன்னனின் மகன்

B தூபராம விகாரையைக் கட்டினான்

C கலாவாவியைக் கட்டினான்

D குருளுவாவியை அமைத்தான்

மேற்கூறப்பட்ட கூற்றுக்களுள் மகாசேனன் மன்னனோடு தொடர்புடைய 2 கூற்றுக்கள்.

i. AB ii. AC iii. AD iv. BD

## தரம் – 11

01. "நிலத்தை அனுபவிக்கும் இராஜகாரிய முறைக்கு ஏற்ப நாட்டில் உள்ள எல்லா நிலமும் அரசனுக்கு சொந்தமானதாகும். அரசனின் பிரதான வருமான வழியும் அந்நிலங்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானமேயாகும்."

i. கட்டாய இராசகாரிய முறையை ஒழிக்க ஆளுநர் நோத் தெரிவித்த 3 காரணங்களைத் தருக. (3 புள்ளிகள்)

ii. ஆளுநர் மெயிற்லண்ட் இராசகாரிய முறையை மீண்டும் கொண்டு வந்தமைக்கான காரணங்கள் 2ஐத் தருக. (4 புள்ளிகள்)

iii. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமையினால் ஏற்பட்ட நீண்ட கால விளைவுகள் 2ஐ விளக்குக. (5 புள்ளிகள்)

iv. பெருந்தோட்டச் செய்கை வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் 3ஐ விளக்குக. (6 புள்ளிகள்)

விடை

i. 1. பொதுமக்களின் உழைப்பை சுதேச அதிகாரிகள் தமது சொந்தத் தேவைக்குப் பயன்படுத்தியமை.

2. இது அடிமை முறை போன்று காணப்பட்டமை.

3. நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான உழைப்பை பெற்றுக் கொள்வதற்கு இராசகாரிய முறை தடையாக இருந்தமை.

ii. 1. தேவைப்படும் உழைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக இராசகாரிய முறை பயன்படுத்தப்பட்டது.

2. அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக இது மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.

iii. நிலமானியமுறை ஒழிந்தது

இராசகாரிய முறை நிலத்தை அடிப்படையாகக் கொண்ட மானிய முறை அம்சமாகும். நிலம் முழுவதும் அரசனுக்குச் சொந்தம் என்பதையும் சாதி முறையையும் இராசகாரிய முறை நிலை நாட்டியது. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதனால் இப்பாரம்பரிய அம்சங்கள் இல்லாமலாக்கப்பட்டன. இலங்கை நவீன உலகில் பிரவேசித்தது. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டதனால், நிலம் முழுவதும் அரசனுக்குச் சொந்தம் என்ற பாரம்பரியக் கோட்பாடு மறைந்தது. ஒருவரது விருப்பம் பெறப்படாமல் அவரை பலவந்தமாக வேலைக்கு அமர்த்தும் அடிமை முறை அகன்றது. எனவே, பாரம்பரிய பாதையில் பயணம் செய்து கொண்டிருந்த இலங்கையை, நவீன பாதையில் வழிநடத்தியது இராசகாரிய முறை ஒழிப்பாகும்.

சம்பளம் பெறும் தொழிலாளர் வர்க்கம் உருவாகியது

இராசகாரிய முறை நடைமுறையில் இருந்த காலப்பகுதியில் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இராசகாரிய முறையைப் பயன்படுத்தி சம்பளம் வழங்காமல், பாதைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய குளங்களும் அமைக்கப்பட்டன. 1833 இல் நடைமுறைக்கு வந்த கோல்புறுக் யாப்பு இராசகாரிய முறையை ஒழித்தது. இதனால் தொழிலாளர் சம்பளம் பெறும் பல தொழில்களையும் புரிந்தனர். கொழும்பு அச்சகத்திலும் வெள்ளவத்தை நெசவு ஆலையிலும் அவர்கள் பணி புரிந்து சம்பளம் பெற்றனர். அவர்கள் தமது நலன்களைப் பாதுகாப்பதற்காக தொழிற்சங்கங்களையும் அமைத்தனர்.

iv. *நிலம் பெறப்பட்டமை*

ஒல்லாந்தர் தோட்டங்களில் கறுவாப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். இதனால் இலங்கையில் பெருந்தோட்டங்கள் வளர்ச்சியடையத் தொடங்கியது. பொருந்தோட்டங்களை ஆரம்பிப்பதற்கு ஆங்கிலேயருக்கு அதிகமான நிலங்கள் தேவைப்பட்டன. இந்நிலங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பாழ்நிலச் சட்டத்தை 1840இல் நடைமுறைப்படுத்தினர். இதன்மூலம் காணி தொடர்பான ஆவணங்கள் இல்லாதவர்களின் காணிகள் ஆங்கிலேயரால் சுவீகரிக்கப்பட்டன. இவ்வாறு பெருமளவு நிலம் இலவசமாகக் கிடைத்தமை பெருந்தோட்டச் செய்கைக்கு வாய்ப்பாக இருந்தது. 1875இல் 500 ஏக்கரில் பயிரான தேயிலை 1887 இல் 1 1/2 இலட்சம் ஏக்கரில் பயிராகியது.

*தொழிலாளர்கள் கிடைத்தமை*

ஆங்கிலேயர் பெருந்தோட்டங்களை ஆரம்பித்தபோது அவற்றில் வேலை செய்ய சிங்களவர்கள் மறுத்தனர். அவர்களது காணிகளை பாழ்நிலச் சட்டதின் மூலம் ஆங்கிலேயர் சுவீகரித்ததே இதற்குக் காரணமாகும். இதன்காரணமாக பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக ஆங்கிலேயரால் தென்னிந்தியத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டனர். குறைந்த கூலியில் அதிகமான தமிழ்த் தொழிலாளர்கள் கிடைத்தமை பெருந்தோட்ட வளர்ச்சிக்கு உதவியது. நுவரெலியா, கண்டி, பதுளை, இரத்தினபுரி, மாத்தளை, கேகாலை முதலிய மாவட்டங்களில் இத்தொழிலாளர்கள் அதிகமாகக் குடியமர்த்தப்பட்டனர். 1850-1900 ஆண்டு காலப்பகுதியில் அதிகமான இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்கு வந்தனர்.

*ஐரோப்பாவில் சாதகமான சந்தை காணப்பட்டமை*

ஐரோப்பாவில் பெருந்தோட்ட உற்பத்திகளுக்கு உயர்ந்த சந்தை காணப்பட்டதனால் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை வளர்ச்சியடைந்து. லண்டன் சந்தையில் சீனத் தேயிலைக்கான கேள்வி குறைந்து, இலங்கைத் தேயிலைக்கான கேள்வி அதிகரித்தது. ஐரோப்பிய மக்கள் இலங்கைத் தேயிலையை அருந்த அதிக ஆர்வம் காட்டினர். 1873ஆம் ஆண்டளவில் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலைச் செய்கை மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. தேயிலைச் செய்கை வேகமாக வளர்ச்சியடைந்தமையால் பயிர்களின் நோய்களைக் கட்டுப்படுத்த தலவாக்கல தேயிலை ஆய்வு நிலையம் ஏற்படுத்தப்பட்டது.

---

சுறுசுறுப்பு: ஓய்விலும் உங்களை..... (22ஆம் பக்கத் தொடர்...)

*ஓய்ந்திருக்காதீர்கள்: ஏதாவது செய்து கொண்டேயிருங்கள்*

சுறுசுறுப்பை இழந்து விடாதீர்கள். சோர்ந்து போய்விடாதீர்கள். நீங்கள் சோர்வடைவது உங்கள் உற்சாகத்தை இழக்கச் செய்துவிடும். "அப்பாடா...! இப்போது நன்றாக ஓய்வாக இருக்க கிடைத்துள்ளது" என அகம் மகிழாதீர்கள். மாறாக, அந்தப் பொழுதைப் பயன்படுத்தி உற்சாகமாக ஏதாவது செய்ய முடியுமா எனப் பாருங்கள். ஓய்வெடுங்கள். அது உங்களுக்குப் புது உற்சாகத்தைத் தரும் வரையில். மாறாக உங்களை சோம்பேறியாக்கி விடுமளவுக்கு, உங்கள் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் இழந்துவிடுமளவுக்கு நீங்கள் ஓய்வெடுக்காதீர்கள். சோர்வடைவதற்கல்ல ஓய்வு: உற்சாகமடைவதற்கே என்ற உண்மையை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். சுறுசுறுப்பாக எதையும் செய்து கொண்டிருப்பவர்களுக்கு தொடர்ந்தும் ஒரே வேலையை செய்வது அல்லது சோம்பேறியாய் இருப்பது எதுவுமே சரிவராது. எனவே, நீங்கள் ஒருபோதும் உங்கள் சுறுசுறுப்பை இழந்துவிடாதீர்கள். அது ஓய்விலும் உங்களை உற்சாகமாகப் பயணிக்க வைக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுறுசுறுப்பு: ஓய்விலும் உங்களை உறங்காமல் வைத்திருக்கும்

ஜே.எம். அஸீம் (நளீமி) www.azeemzain.org

பாடசாலை விடுமுறை என்றதுமே எல்லோருக்கும் ஓய்வு என்பதுதான் ஞாபகம் வரும். ஆம், பாடசாலை விடுமுறை ஓய்வுதான். ஆனால், பலர் வீணாக்குவது போன்றதொரு ஓய்வல்ல அது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அந்த விடுமுறையின்போது வழமையான உங்கள் நேரசூசியிலிருந்து விடுபட்டு வழமையை விட சுறுசுறுப்பாக இயங்குங்கள். சிலருக்குப் பாடசாலை விடுமுறை என்பதை நினைக்கும்போதே உற்சாகம் பீறிட்டுப் பாயும். பாடசாலை வாழ்க்கையின் பின்னர் நீங்கள் மிகவும் சுறுசுறுப்பாக இயங்க வேண்டிய தேவை இருக்கிறது. அதற்கு இப்போதிலிருந்தே தயாராகுங்கள்.

சுறுசுறுப்பாக இயங்குபவர்களைப் பார்க்கும்போதே எமக்கும் உற்சாகம் பிறந்துவிடும். மிகவும் சுறுசுறுப்பாக இயங்கும் பருவம் இளமைப்பருவம். இளம் காளையர்களின் துடிப்பை யாரும் மிஞ்சிவிட முடியாது. இதயத்துடிப்பு துடிதுடிப்பாக இருப்பது, இரத்த ஓட்டம் சுறுசுறுப்பாக இருப்பது, செயல்களில் இழையோடியிருக்கின்ற சுறுசுறுப்பு அனைத்தும் ஒன்றாக இணைகின்றபோது தோன்றும் சுறுசுறுப்பு உங்களை எங்கோ கொண்டுபோய்விடும்.

இவ்வாறு சுறுசுறுப்பாக இயங்கக்கூடியவர்களை பணியில் அமர்த்தவே பெரும் பெரும் நிறுவனங்கள் விரும்புகின்றன. ஏனெனில் அவர்கள்தான் சாதிக்கக்கூடியவர்கள். கொடுக்கின்ற பணியை உற்சாகமாகவும் விரைவாகவும் செய்து முடிக்கக்கூடியவர்கள். அவர்களை இயக்க இன்னொருவர் தேவையில்லை. முன்னர் காரும் சாரதியும் வழங்கிய நிறுவனங்கள் இப்போது காரை மட்டும் வழங்குவது போல, வேலைக்கு ஒருவரை எடுத்து அவரை இயக்குவதற்கு மற்றொருவரை நியமித்த நிறுவனங்கள் அந்த நிலையிலிருந்து மாறி இவ்வாறு சுறுசுறுப்பாக இயங்கும் இளைஞர்களையே வேலைக்குத் தேர்ந்தெடுக்கின்றன.

உங்களுக்கு வேலையே இல்லாமற் போகும்போது இந்தத் துடிதுடிப்பும் இல்லாமற் போய்விடலாம். துள்ளித் திரியும் மான் குட்டி, சுழித்து ஓடும் மீன், இறக்கைகளை வேகமாக விசிறியடித்துப் பறக்கும் சின்னஞ் சிறு சிட்டுக்கள் என சூழலில் நாம் காணும் சுறுசுறுப்பான உயிரினங்கள் எமக்குக் கற்றுத்தரும் உன்னத பாடம் தான் இந்த சுறுசுறுப்பு. இந்த சுறுசுறுப்பை ஜப்பானியர்களிடத்தில் காணலாம். இராணுவ வீரர்களிடமும் காணலாம். விளையாட்டு வீரர்களிடம் காணலாம். சில சுறுசுறுப்பான அரசியல்வாதிகளையும் காணலாம்.

இந்த சுறுசுறுப்பு உங்களிடமும் மிகைத்திருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் வேலைகளின் வேகம் பன்மடங்காகும். செயல் மாத்திரம் சுறுசுறுப்பாக அமைவதைவிட சிந்தனையும் செயலும் சுறுசுறுப்பாக அமைகின்றபோது இரட்டை நன்மை கிடைக்கும். சுறுசுறுப்புமிக்க பேச்சாளர்கள் சாதித்திருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சுறுசுறுப்பும் குறும்புத்தனமும்

துடிதுடிப்பாக இயங்குபவர்களிடம் குறும்புத்தனம் காணப்படலாம். அவர்கள் சுறுசுறுப்பாக இருப்பதற்காக ஏதாவது குறும்பு செய்து கொண்டே இருப்பார்கள். எடிசன் பள்ளிக்கு செல்லாமல் முட்டைக்கு மேல் இருந்து குறும்புகள் செய்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு குறும்புத்தனத்துடன் செயற்படுகின்ற பிள்ளைகள் தமது குறும்புகளை அர்த்தமுள்ளதாகவும் ஆக்கபூர்வமாகவும் ஆக்கிக் கொள்வது சிறந்தது. சிலபோது புதிய சிந்தனைகள் பிறக்க இது காரணமாக அமைந்துவிடும்.

### சுறுசுறுப்பும் இயங்காற்றலும் (Active & Dynamic)

Dynamic Personality பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இத்தகைய ஆளுமைகள் பிறரில் தாக்கம் செலுத்தக் கூடியவர்கள். இத்தகைய ஆளுமைமிக்கவர்களாக நீங்கள் மாற வேண்டுமென்றால் அதற்கு உங்களை நீங்களே தயார்படுத்திக் கொள்ள வேண்டும். கவி வரிகளால் இளைஞர்களைத் துள்ளி எழச் செய்த அல்லாமா இக்பால் போன்றவர்கள் இத்தகைய Dynamic Personality மிக்கவர்கள்.

### சுறுசுறுப்பாக இயங்குவதற்கு தேவையான மனப்பாங்கு (Attitude)

உங்கள் மனப்பாங்கு உங்கள் செயற்பாட்டைத் தீர்மானிக்கும். நீங்கள் சுறுசுறுப்பான மனப்பாங்கில் இருந்தால் உற்சாகமாக செயற்படுவீர்கள். நீங்கள் சோர்வான மனப்பாங்களில் இருந்தால் உங்களால் உற்சாகமாகப் பணியாற்ற முடியாது. எனவே, நீங்கள் சுறுசுறுப்பான மனோநிலையில் இருக்க முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் உங்களால் சுறுசுறுப்பாக இயங்க முடியும்.

### சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு

சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு உங்களைத் சுறுசுறுப்பாக வைத்திருக்கும். உங்களை இயக்குவதற்கு ஒரு உந்துசக்தி வேண்டும். அந்த உந்து சக்தியை நீங்கள் எங்கிருந்தாவது பெற வேண்டும். சிலருக்கு தோல்விகள் அந்த உந்து சக்தியைப் பெற்றுக் கொடுக்கும். சிலருக்கு கனவுகள் அந்த உந்து சக்தியைப் பெற்றுக் கொடுக்கும். இப்படி பலருக்கு பல விடயங்கள் அந்த உந்து சக்தியைப் பெற்றுக் கொடுக்கும். அது உங்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் கனவு, தோல்வி, தேவை இப்படி ஏதாவதொன்று உங்களிடம் வர வேண்டும். அந்த உந்து சக்திதான் நீங்கள் சாதிக்க வேண்டும் என்ற சாதனை உணர்வை உங்களுக்குள் விதைக்கும். அந்த விதை விருட்சமாகத் தேவையான பல காரணிகளுள் ஒன்றுதான் இந்த சுறுசுறுப்பு; சாதிக்க வேண்டும் என்ற துடிப்பு.

### இப்போதே செய்யும் பழக்கம் சுறுசுறுப்பான இயக்கம்

எந்தவொரு வேலையையும் இப்போதே செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுவது உங்களைத் சுறுசுறுப்பாக இயங்கச் செய்யும். பிறகு செய்வோம் என்ற ஒத்திப் போடும் மனப்பாங்கு, அலட்சியம், கவனயீனம், பொறுப்பற்றிருத்தல் போன்ற தவறான பழக்கங்களைக் களைந்து சுறுசுறுப்பாக இயங்க இப்போதே செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஜப்பானியரிடம் காணப்படும் இன்றே செய்யும் பழக்கம்தான் அவர்களுக்குள் சுறுசுறுப்பை விதைத்துக் கொண்டிருக்கிறது.

### நேரம் பற்றிய சுறுசுறுப்பான உணர்வு

எந்தவொரு வேலையானாலும் அதனை செய்வதற்கு உள்ள நேரம் பற்றிய உணர்வு எம்மை எப்போதும் சுறுசுறுப்பாக இயங்க வைக்கும். குறிப்பிட்ட வேலைக்கு குறித்த நேரம் முடியப் போகின்றது என்றதும் நீங்கள் பதறிப்பதறி பணியாற்றிய பொழுதுகளை நினைத்துப் பாருங்கள். இந்தப் பதற்றம் தணிய நீங்கள் எப்போதும் உற்சாகத்தோடும் துடிதுடிப்போடும் பணியாற்றுங்கள். சுறுசுறுப்பாக நீங்கள் பணியாற்றுவது உங்கள் வேலைப்பளுவைக் குறைக்கும். வேலை நேரத்தை மீதப்படுத்தித் தரும். வேலை நேரத்தில் நீங்கள் சுறுசுறுப்பாக செயற்படுவது உங்களுக்கு மென்மேலும் உற்சாகத்தைத் தரும்.

### சுறுசுறுப்பாய் பணியாற்ற உடற்பயிற்சி

உடற்பயிற்சி உங்கள் சுவாசத்தையும் இரத்த ஓட்டத்தையும் சீராக்கும். அவை உங்களை சுறுசுறுப்பாக பணியாற்றச் செய்யும். உடலாரோக்கியமும் உள்ளத்தின் ஆரோக்கியமும் சுறுசுறுப்பாக பணியாற்ற அவசியம். விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள். காலையில் அல்லது மாலையில் உடற்பயிற்சி செய்யுங்கள். நல்ல காற்றோட்டமான இடங்களில் அமர்ந்திருங்கள். உங்கள் இரத்த ஓட்டத்தை சீராக வைத்திருங்கள்.

( 20ஆம் பக்கம் பார்க்க... )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைப் பிரதமருக்கான கலாநிதிப் பட்டம்



- 2013 மார்ச்சில் கொரியா சன்மூன் பல்கலைக்கழகம் இலங்கைப் பிரதமர் தி.மு. ஜயரட்ண அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.
- இலங்கையில் சமாதானம் மற்றும் சக வாழ்வை உறுதிப்படுத்துவதற்காக ஆறு தசாப்தங்களுக்கு மேலாக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைப் பாராட்டி வழங்கப்பட்டது.

## போராசிரியர் கும்புறுகமுவ வஜிர தேரருக்கு உயர் விருது



- 2013 மார்ச்சில் மியன்மார் அரசின் உயரிய கௌரவ விருதான அக்கமஹா பண்டித பட்டம் வழங்கி கௌரவித்தது.
- இவர் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவராவார்.
- இவர் ஆன்மிகப் பணிகளைப் போன்று சமாதானம், சகவாழ்வு ஆகியவற்றுக்கும் தேசிய மட்டத்தில் பணிபுரிந்து வருகிறார்.

## இலங்கைப் பாடசாலைகளின் குறைந்த மட்ட நிலைமைகள்

- இலங்கையில் உள்ள அரச பாடசாலைகளில் 123 பாடசாலைகள் ஒரு மாணவனுடனும் 147 பாடசாலைகள் இரு மாணவர்களுடனும் காணப்படுகின்றன.
- 2012ம் ஆண்டில் இலங்கையில் 36 பாடசாலைகள் இயங்க முடியாத நிலைமையால் மூடப்பட்டன.
- 5166 பாடசாலைகள் அதிபர்கள் இன்றி இயங்குகின்றன.










**திரு. பீ. உமா சங்கர்,**
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo

# இலங்கை
## சமாதான பாத யாத்திரை



- 2013 மார்ச் 06ம் திகதி தொடக்கம் ஏப்ரல் 6ம் திகதி வரை இப்பாதையாத்திரை நடைபெற்றது. இது கதிர்காமத்திலிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- இலங்கைக்கும் இலங்கை மக்களுக்கும் சமாதானமும் ஆரோக்கியமும் வேண்டி இலங்கை தெற்கிலிருந்து வடக்கிற்கான இலங்கை சமாதான பாதயாத்திரை Live to love மற்றும் Drakpa lineage Buddhism என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்டது.
- இப் பாத யாத்திரை உலகின் பல பாகங்களிலுமுள்ள மக்களுடன் Drakpa lineage Buddhism ஆன்மிகத் தலைவர் புதின இயால்வங்ட்ருக்பா அவர்களால் நடத்திச் செல்லப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சர்வதேச மகளிர் தினம்

- வருடாந்தம் மார்ச் 08இல் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரத்தில் 1900ம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும் 1975ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் மார்ச் 08 என பிரகடனம் செய்யப்பட்டது.
- 2013ம் அண்டிற்கான தொனிப் பொருள் "குடும்பத்தினைப் பாதுகாக்கும் அவளை நாம் பாதுகாப்போம்" என்பதாகும்.

**இலங்கையில் பெண்கள் பரம்பல்**

- மொத்த சனத்தொகையில் பெண்களின் சதவீதம் 51.5
- மொத்த தொழிற்படையில் பெண்களின் சதவீதம் 32.8
- பாராளுமன்றத்தில் பெண்களின் எண்ணிக்கை 13




- 2013 மார்ச்சில் புதிய பாப்பரசராக முதலாம் பிரான்ஸிஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- இவரது இயற் பெயர் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ
- இவரது பிறப்பிடம் ஆர்ஜென்டீனா, புயனொஸ் அயர்ஸ்.
- இவர் உலகின் முதலாவது இலத்தின் அமெரிக்கப் பாப்பரசராவார்.
- 1300 ஆண்டுகளுக்குப் பின்னர் ஐரோப்பியர் அல்லாத ஒருவர் பரிசுத்த பாப்பரசராக பதவியேற்றுள்ளார்.
- கத்தோலிக திருச்சபையின் மிகப்பெரும் குருக்களுக்கான துறவற சபைகளில் ஒன்றாகிய இயேசு சபையில் இருந்து தெரிவான முதலாவது திருத் தந்தை.
- திருச்சபை வரலாற்றில் பிரான்ஸிஸ் என்ற பெயரைத் தேர்ந்துக் கொண்ட முதல் திருத்தந்தையும் இவரே ஆவார்.





- கொழும்பை அடிப்படையாகக் கொண்ட பௌத்த அமைப்பாகும்.
- இது ஓர் அரசியல் கட்சியல்ல என்பதுடன் சிங்கள சலாசாரம், மரபுரிமைகள் மற்றும் பௌத்த உளவியல் என்பவற்றைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சிவில் அமைப்பாகும்.
- இவ் அமைப்பின் தலைவர் கிரம விமலஜோதி தேரர் ஆவார்.

## சீனாவின் புதிய ஜனாதிபதி பிரதமர் மற்றும் உப ஜனாதிபதி




- 2013 மார்ச்சில் சீனாவின் புதிய ஜனாதிபதியாக ஸி ஜின்பிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- வருடாந்த பாராளுமன்றக் கூட்டத்தில் 3000 பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் பங்கேற்று 2952 பேர் ஆதரவாக வாக்களித்தனர்.
- 2013 மார்ச்சில் சீனாவில் புதிய உப ஜனாதிபதியாக லி யுவான் சவோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- சீனாவின் இப்புதிய தலைமைகள்; பணக்காரர் ஏழைகளுக்கு இடையிலான இடைவெளி அதிகரிப்பு, சூழல் பிரச்சினை, உணவுப் பாதுகாப்பு, பிராந்திய நாடுகளுடனான முறுகல், தீவுப் பிரச்சினை தொடர்பில் ஜப்பானுடன் இழுபறி ஆகிய சிக்கல்களை எதிர்நோக்கி உள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



● ஹலீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

# வினைத்திறனாகக் கற்கும் மாணவனாக மாறுவது எப்படி?

"மிக வேகமாகவும் சிறந்த முறையிலும் கற்பதற்கான புதிய வழி முறைகளைத் தெரிந்து கொள்வதில் நான் எப்போதும் ஆர்வமாக இருக்கிறேன். பாடசாலைக்குச் செல்வது தவிர, மாலை நேர வகுப்புக்கள், வீட்டு வேலைகள் மற்றும் ஏனைய பாடப் புறச்செயற்பாடுகளின் காரணமாக பாடங்களைப் படிக்க ஒதுக்கும் நேரம் குறைவாகவே இருக்கின்றது. இருப்பினும் கிடைக்கும் சாத்தியமான நேரத்தினுள் கல்வி ரீதியான பெறுமதியான பயன்களைப் பெறுவது மிக முக்கியமான விடயம் என நம்புகிறேன். எவ்வாறாயினும் படித்த விடயங்களை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளல், மீட்டுதல் மற்றும் குறுகிய கால, நீண்ட கால ஞாபகங்களில் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றுவது போன்ற விடயங்கள் பயன்மிக்க கற்றல் செயன்முறைகளில் மிக முக்கியமான அம்சங்களாகும். நான் கற்ற விடயங்கள், தகவல்களை மிகத் துல்லியமாக ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்ப அத்தகவல்களை மீட்டி திறம்பட பயன்படுத்திக் கொள்ளவும் தேவையான வழிமுறைகளை அறிந்து கொள்ள வேண்டும் என்று மிகுந்த ஆர்வமாக உள்ளேன். எனக்கு வழி காட்ட முடியுமா?"

இது ஒரு மாணவனின் கேள்வி. இக்கேள்விக்கான பதில்கள் அகரத்தின் சென்ற பல இதழ்களில் வெளிவந்துள்ளன. இருப்பினும் இம்மாணவனுக்குரிய இதே கேள்வி பலருக்கும் இருக்கும் என்ற வகையில் அவற்றுக்கான பதில்களை ஒரு தொகுப்பாக புதிய கண்ணோட்டத்தில் விளக்கலாம் என நினைக்கிறேன். இத்தகைய பிரச்சினைகள், கேள்விகள் உள்ளவர்கள் பின்வரும் விடயங்களைக் கருத்தூன்றிக் கவனிப்பது சிறந்தது.

1. ஞாபகத்தை மேம்படுத்தும் அடிப்படைகள்

ஞாபகத்தை மேம்படுத்தும் சிறந்த பல வழிமுறைகளை முன்னரும் பல தடவைகள் எழுதியிருக்கிறேன். கவனக் குவிப்பை மேம்படுத்தல், படிக்கும் நேரத்தை ஒழுங்குபடுத்தல், கருத்து விளக்கமின்றி பாடமாக்குதல் போன்ற விடயங்கள் ஆரம்பத்தில் கவனத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள வேண்டிய விடயங்களாயினும் உங்களுடைய செயற்திறன்மிக்க கற்றலை மேம்படுத்தும் வகையில் உளவியல் ரீதியான பெரும்பாலான விடயங்களும் காணப்படுகின்றன என்பதை அறிந்து வைத்துக் கொள்ளுங்கள்.

**2. புதிய விடயங்களைத் தொடர்ந்து கற்றுக் கொள்ளலும் நடைமுறைப்படுத்தலும்**

வினைத்திறனாகக் கற்கும் மாணவனாக வருவதற்கான மிக முக்கியமானதொரு வழிமுறைதான் தெடர்ந்து கற்பதாகும். ஆக நீங்கள் ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள்கிறீர்கள் என்றால், அம் மொழியைப் படிக்கின்றபோது பெற்றுக் கொண்ட அடைவுகளைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ள தொடர்ச்சியான பயிற்சிகள் மிக முக்கியமாகும். இது பயன்படுத்து அல்லது தொலைத்துவிடு (Use it or lose it) என்று அழைக்கப்படுகிறது. அதாவது தொடர்ச்சியான பயிற்சிகள் செய்யும் போது அவை ஞாபகத்தில் பதியும் இல்லாவிட்டால் மறந்துவிடும். எனவே, புதிய தகவல்களைக் கற்று அவற்றை ஞாபகத்தில் பதிந்து வைத்துக் கொள்ள விரும்பினால் அவ்விடயங்களைத் தொடர்ந்தும் நடைமுறையில் பயன்படுத்துபவர்களாக இருங்கள்.

**3. பல வகையான வழிமுறைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்**

சாதாரணமாக காதினால் மாத்திரம் கேட்பதை விட ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகளினூடாக கற்றலில் கவனத்தைச் செலுத்துங்கள். ஒரு தகவலை நடைமுறைப்படுத்த வாயால் மொழிதல், காட்சிப் படுத்தல் போன்ற வழிமுறைகளைப் பயன்படுத்துங்கள். உதாரணமாக உங்களுடைய நண்பன் ஒருவருக்கு நீங்கள் கற்ற ஒரு விடயத்தை விளங்கப் படுத்தல், குறிப்பெடுத்தல் அல்லது மன வரைபடம் வரைதல் (Drawing a Mindmap) போன்ற செயற்பாடுகளை இங்கு குறிப்பிடலாம். இவ்வாறு ஒரு தகவலைக் கற்றுக் கொள்ளவும் அவற்றை Practice பண்ணவும் ஒன்றுக்கு மேற்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்தும்போது அத்தகவலை நீங்கள் உங்களுடைய மனதில் மீள வலியுறுத்துகிறீர்கள். ஞாபகத்தில் உறுதியாகப் பதிய வைக்கின்றீர்கள்.

'ஜுடி வில்ஸ்' என்பவரது கருத்துப்படி, ஒரு விடயம் தொடர்பான தரவுகள் மூளையின் பல்வேறு பகுதிகளில் சேமிக்கப்படும்போது அவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகள் அதிகரிக்கின்றன. இதன் அர்த்தமானது, மாணவர்கள் தமது பல்வேறு ஞாபகப் பதிவகங்களிலிருந்து ஒரு விடயத்துடன் தொடர்பான பல்வேறு தரவுகளையும் ஒரு ஞாபகப்படுத்தலினூடாகப் பெற்றுக் கொள்வதற்கான பல வாய்ப்புகளைக் கொண்டு காணப்படுகின்றன என்பதாகும். இது வெறுமனே மனனம் செய்வதனூடாக இடம் பெறாது மாறாக பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி கற்றுக் கொள்வதனால் மாத்திரமே சாத்தியமாகும்.

**4. நீங்கள் கற்றுக் கொண்டதை இன்னுமொருவருக்குக் கற்றுக் கொடுங்கள்**

சில விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு மிகச் சிறந்த வழிகளில் ஒன்றுதான் அவ்விடயங்களை இன்னுமொருவருக்குக் கற்றுக் கொடுப்பதாகும் என்பது கல்விமான்கள், கல்வியியலாளர்களின் நீண்டகால அவதானமாகக் காணப்படுகின்றது. இக்கற்பித்தலை பின்வரும் செயற்பாடுகளினூடாக ஆரம்பிக்கலாம்.

i) நீங்கள் கற்றுக் கொண்ட தகவல்களை உங்களுடைய சொந்த மொழிநடைக்கு மாற்றுங்கள். இச்செயன்முறையானது உங்களுடைய மூளையில் புதிய அறிவைப் பதியவைக்க உதவுகிறது.

ii) நீங்கள் கற்றுக் கொண்ட விடயங்களை அதாவது இப்போது உங்களிடம் காணப்படும் விடயங்களை இன்னுமொருவருக்குக் கற்றுக் கொடுப்பதற்கான சில வழிமுறைகளைக் கண்டறியுங்கள். ஒரு போஸ்ட் காட்டைத் தயாரித்தல், குழுக் கலந்துரையாடலில் பங்குபற்றுதல், வலைத்தளத்தில் பிரசுரித்தல், பிரிஸ்டல் அட்டையில் எழுதுதல் மற்றும் Power point Presentation தயாரித்தல் போன்றவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

என்னுடைய கல்லூரி நண்பன் ஒருவன் தந்தை, அவர் வாசிக்கும் புத்தகத்தில் அவர் முக்கியம் என்று காணும் விடயங்களை தனது மகனும் அறிந்திருக்க வேண்டும் என்பதற்காக ஒரு போஸ்ட் காட்டில் எழுதி தபாலில் அனுப்பி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இது அவருக்கு இரட்டை இலாபத்தைக் கொடுத்தது. ஒன்று, தான் படித்த முக்கியமான விடயங்களை தனது மகனுடன் பகிர்ந்து கொண்டார். அடுத்தது, அவ்விடயங்களை தனது ஞாபகத்திலும் ஆழப் பதிந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. புதிதாக ஒரு விடயத்தைக் கற்றுக் கொள்ள ஏலவே கற்ற விடயங்களைப் பயன்படுத்தல்

வினைத்திறன்மிக்க மாணவராக மாறுவதற்கு மற்றுமொரு சிறந்த வழிமுறைதான், புதிய ஒரு விடயத்தை அது தொடர்பாக முன்னர் கற்ற விடயத்துடன் தொடர்புறுத்திக் கற்பதாகும்.

6. நடைமுறை அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

எங்களில் அதிகமானவர்கள் பாடப் புத்தகங்கள், பாடக் குறிப்புகளை வாசித்தல் அல்லது ஆசிரியர் விளங்கப்படுத்துவதைச் செவிமடுத்தல் போன்ற வற்றினூடாகவே கற்றுக் கொள்கின்றனர். தகவல் களைக் கண்களால் பார்த்து எழுதிக் கொள்வது முக்கியம் என்றிருந்தாலும் புதிய அறிவையும் திறன் களையும் நடைமுறைப்படுத்துவதானது கற்றலை மேம்படுத்துவதற்கான சிறந்த வழிமுறையாகும். நீங்கள் புதியதொரு திறனை அல்லது ஆற்றலைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கின்றீர்கள் எனின், செயல்முறை ரீதியான அனுபவங்களைப் பெறு வதில் உங்களுடைய கவனத்தைச் செலுத்துங்கள். உண்மையில் நீங்கள் பெற விரும்பும் திறன் அல்லது ஆற்றலானது விளையாட்டு சார்ந்ததாக இருப்பின் நாளாந்தம் பயிற்சியில் ஈடுபடுங்கள். நீங்கள் ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள்கிறீர்கள் என்றால் மற்றுமொருவருடன் அல்லது உங்களுடன் இருப் பவர்களுடன் பேசுவதனூடாக செயன்முறைப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் ஆழமான அனுப வங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

7. எவ்வாறு நீங்கள் மிகச் சிறந்த முறையில் கற்றுக் கொள்கிறீர்கள் என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்

உங்களுடைய கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ள மற்றுமொரு சிறந்த வழிமுறைதான் உங்க ளுடைய கற்றல் வழிமுறை மற்றும் கற்றல் வழக் கங்களை அறிந்து கொள்வதாகும். கற்றல் வழி முறை தொடர்பில் பல கோட்பாடுகள் காணப் படுகின்றன. அகரத்தின் முந்திய இதழ்களில் காட் னரின் 8 வகையான கற்றல் வழிமுறைகள் விளக்கப் பட்டிருந்தமையை நீங்கள் அறிவீர்கள். அதுவல் லாமல் கார்ல் ஜங் (Carl Jung) இன் கோட்பாடும் காணப்படுகின்றது. அவை தொடர்பில் அடுத் தடுத்து வரக்கூடிய இதழ்களில் விளக்கப்படும், இன்ஷா அல்லாஹ். இவைகளுள் உங்களுடைய கற்றல் வழிமுறை எது என்பதை அறிந்து அதை நடை முறைப்படுத்தினால் உங்களுடைய கற்றல் திறனையும் அதனால் கிடைக்கக்கூடிய பயன்க ளையும் மேம்படுத்திக் கொள்ளலாம்.

8. கற்றலை துரிதப்படுத்த பரீட்சைகளைப் பயன்படுத்தல்

வெறுமனே படிக்காமல் படித்த விடயங்களுக் குள் வினாக்களைத் தொகுத்து தாமாகவே தம்மைப் பரிட்சித்துக் கொள்வதானது கற்றலை மேலும் துரிதப்படுத்துவதுடன் படிக்கின்ற விடயங்களை ஞாபகத்தில் பதியவைக்கவும் விரைவாக மீட்டிக் கொள்ளவும் துணை புரிகிறது.

9. ஒரே நேரத்தில் பல வேலைகளில் ஈடுபடு வதை நிறுத்திக் கொள்ளுங்கள்

ஒரே நேரத்தில் பல விடயங்களில் ஈடுபடுபவர் அவ்வாறு ஈடுபட முடியாதவர்களை விட மேலான வர்கள் என்ற சிந்தனை பல வருடங்களாக மக்கள் மத்தியில் நிலவி வந்தது. எவ்வாறாயினும் ஒரே நேரத்தில் பல வேலைகளை மேற்கொள்பவர்களால் வினைத்திறனாகக் கற்க முடியாது என தற்போதைய ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. எனவே, படிக்கின்ற விடயத்தைப் பொறுத்தவரை ஒரு நேரத்தில் குறித்த ஒரு விடயத்தில் மாத்திரந்தான் கவனம் செலுத்த வேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொள் ளுங்கள். தவறும் பட்சத்தில் உங்களுடைய வினைத்திறன் மிக்க கற்றலில் பாதிப்பு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு நாளாந்த வாழ்க்கையில் செயற்படுத்தினால் உங்களுடைய வினாவுக்கு விடைகாண முடியும் என நம்புகிறேன், இன்ஷா அல்லாஹ்.


உசாத்துணை.

1. Draganski, B., Gaser, C., Busch, V., .& Schuierer, G. (2004). Neuroplasticity: Changes in grey matter induced by training. *Nature, 427(22)*, 311-312.
2. Willis, J. (2008). Brain-based teaching strategies for improving students' memory, learning, and test-taking success.(Review of Research). *Childhood Education, 83(5)*, 31-316.
3. Chan, J.C., McDermott, K.B., & Roediger, H.L. (2007). Retrieval-induced facilitation. *Journal of Experimental Psychology: General, 135(4)*, 553-571.
4. Rubinstein, Joshua S.; Meyer, David E.; Evans, Jeffrey E. *Journal of Experimental Psychology: Human Perception and Performance, 27(4)*, 763-797.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

## பகுதி iii நாட்டார் பாடல்

*வினா: கீழ்வரும் மீன்பிடிப் பாடலை ஆதாரமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

அ) இப்பாடலில் இடம்பெறும் கடற்றொழில் சார்ந்த சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் என்பவற்றைத் தருக.

ஆ) மீன்பிடித் தொழிலின் மேன்மை, மீனவரது மன உறுதிமிகு செயற்பாடுகள் என்பவற்றைத் துலக்குக.

***விடை:***

- ***கடற்றொழில் சார்ந்த சொற்கள்***

அ) கட்டுவலை, தோணி, உழுவை, கட்டை, சுறா

- ***பேச்சுவழக்குச் சொற்கள்:***

மச்சான், முழுப்பட (முழுவதும்), எடுத்துக் கிட்டு (எடுத்துக் கொண்டு), திண்டுவிட்டு (தின்றுவிட்டு)

ஆ) மீனவர்கள் தம் தொழில் மீது கொண்ட பற்றுறுதியையும் நம்பிக்கையையும் உறுதியையும் துணிவையும் இப்பாடலில் வெளிப்படுத்தப் படுவதோடு, மீனவர் தொழிலின் சிறப்பும் அழகாக எடுத்துக் காட்டப்படுகிறது.

கடற்றொழிலை ஆரம்பிக்க தோழமையோடு தயாராகுதலை நோக்க முடிகிறது. 'புறப்படுவோமே புறப்படுவோமே' என 'மச்சான்' என விளிக்கும் பாடல் நயத்திற்குரியது.

'கட்டுவலை எடுத்துக்கிட்டு புறப்படுவோமே' என உற்சாகத்தோடும் பாடுகின்றனர். 'கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு' என அவர்களது உறுதி வெளிப்படுகிறது. கடல் வளத்தில் எம்மீன் தான் இல்லை எனக் கேட்பது போல 'கட்டை சுறா, உழுவை மீன்...' எனப் பாடுகின்றனர். 'வீண் கவலையற்று வாழ்ந்திடுவோம்' என துணிச்சலும் உற்சாகமும் இப்பாடலினூடாக ஊட்டப்படுகிறது. கடல் கடந்து சென்றால் வீண் கவலைகள் மறக்கும் எனப் பாடுவது நம்பிக்கையையும் கடற்றொழிலின் மேன்மையையும் வெளிக்காட்டுகிறது.

மேலும், 'முப்பது நாள் உழைத்துழைத்து... கடனை வாங்கி..., என்று தொடரும் வரியில் 'மனப் பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்' என்று கூறி நம் கையை நம்பி உழைக்கும் 'மீன்பிடி' மேலானதென பாடுவது கடற்றொழிலின் மேன்மையை சமூக நிலைப்பாட்டை உணர்த்தி நிற்கிறது.

மீனவர் கடலையே நம்பி வாழ்கின்றனர். 'தன் கையே தனக்கு நிழல்' என்பது போல மீனவர் தங்களுடைய கையை பெரிதும் நம்புகின்றனர். 'கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு' என்றும் சோம்பியிருக்க வேண்டாம் என்றும் 'புறப்படுவோமே புறப்படுவோமே' என்றவாறு பாடுவது மீனவரது மனவுறுதியை எமக்கு எடுத்துக் காட்டுகிறது.

வாழ்வுக்கு விடிவு காணத் துடிக்கும் மீனவர், வாழ்வின் விடியலை கடற்றொழிலில்தான் தேடுகின்றனர். இப்பாடலின் ஒவ்வொரு வரியும் மீனவரது வாழ்வியலை பிரதிபலிக்கும் அதேவேளை, அவர்களது துன்பமயமான போராட்டமான கடற்றொழில் பற்றியும் அத்தொழில் மீது அவர்களது மன உறுதி, நம்பிக்கையையும் சித்திரிப்பதாகவே உள்ளது.

### மீன்பிடிப்பாடல்

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே

கடல் கடந்து செல்வதற்கு தோணியுமுண்டு
கட்டைச் சுறா உழுவை மீன் கடலிலேயுண்டு
கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு
மச்சான் முழுப்படவுண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் கடந்து மீன் பிடிப்போமே – வீண்
கவலையற்று வாழ்ந்திடுவோமே
முப்பது நாள் உழைத்துழைத்து நிறையப் பணம் வாங்கி
பாக்கி நாளில் பெரும் பகுதியை பட்டினியாக்கி மனப்
பதறலோடு மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்
மாரடிக்கும் சன்மமும் வேண்டாம்.

புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே
கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே

- *கிட்டியடித்தல் விளையாட்டுப் பாடல்*

**வினா: கிட்டியடித்தல் 'பாடலில் கூறப்படும் விளையாட்டும் அதனூடாகப் புலப்படும் சிந்தனையையும் தெளிவுறுத்துக.**

## பாடல்: கிட்டியத்தல் விளையாட்டுப் பாடல்

கவடியடிக்க கவடியடிக்க
கை கால் முறியக் கை கால் முறியக்
காலுக்கு மருந்து தேடிக் கட்டு தேடிக் கட்டு

மாம்பட்டை மருதம் பட்டை வௌவாலோடிய தென்னம்பட்டை
பூம்பட்டை புளியம்பட்டை பட்டணம் பட்டணம்

ஆலையிலே சோலையிலே ஆலங்காடி சந்தையிலே
கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு
பாலாறு பாலாறு பாலாறு

கீழாறோலை மேலாறோலை எண்ணிப் பார்த்தால் பதினாறோலை
கிட்டிப் புள்ளும் பம்பரமும் கிறுகியடிக்கப் பாலாறு

ஆலஞ்சருகு மடமடவெனவே அங்கொரு வண்டிலுருண்டுவரக்
காலாடிவரப் பொழுதேறி வரத் தெந்தட்டத் தெருத்தட்டத்
தெருவெங்கும் பொறித்தட்ட பூம்பட்டை புளியம்பட்டை
வௌவாலோடிய தென்னம்பட்டை கவடி கவடிக் கவடி

**விடை**

கிட்டியடித்தல் பாடலில் கிட்டியடித்தல் விளையாட்டின் தன்மை அதனூடாக சிந்தனைகளைத் தருதல் என்பன குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

கிராமப்புற மக்கள் விளையாடும் விளையாட்டுக்களுள் கிட்டிப் புள்ளும் ஒன்றாகும். சிறுவர்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் பிரசித்து பெற்ற விளையாட்டாகத் திகழ்கிறது. 'கிட்டி' என்பது 'புள்' என்னும் தடியைவிட நீளமானது. 'புள்' எனும் சிறு தடியை எதிர்ப்பக்கம் ஒருவன் எறிய கிட்டியால் மற்றையவன் அடித்தல் இவ்விளையாட்டாகும். இவ்வாறு விளையாடுகையில் பாடப்படும் பாடலே இது.

இந்தப் பாடலைப் பாடுபவன் 'கிட்டி' அடிப்பவனேயாகும். 'புள்' வரும்போது அதனை வேகமாக அடித்துவிட்டு இப்பாடலைப் பாடிக் கொண்டு ஓடுவான். மூச்சுவிடாமல் பாடிக் கொண்டு 'ஓடுவதைக் கவனிக்க கூட ஒருவன் ஓடி மதிப்பிடுவான். பாடல் முடிவுற்றால் கடைசிச் சொல்லை மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்.

கிட்டியடிக்கும்போது இவ்வாறாக பாடும் வழக்கம் வழக்கிழந்து விட்டது. கிட்டியடித்தல் விளையாட்டு இன்னும் சில கிராமப்புரங்களில் சாதாரண விளையாட்டாக சிறுவர்கள் விளையாடுவதைக் காணமுடிகிறது. விளையாட்டு திரிபடைந்து விளையாடப் பட்டாலும் இந் நாட்டாரியல் தன்மை வழக்கிழந்தது கவலைக்குரிய விடயமே.

இவ்விளையாட்டுப் பாடலில் காணத்தகு வரிகளை நோக்குவோமாயின் சில பேச்சுவழக்குச் சொற்கள் பாடலின் பொருளை உணர்த்தாத போதும் ஓசை நயம் கொண்டதாகத் திகழ்கிறது. வாய்மொழி இலக்கியம் என்பதால் சொற்கள் மாறுபட வாய்ப்பிருக்கிறதென்பதும் நினைவுகூரத் தக்கது. மேலும், கூடி விளையாடும்போது காயங்கள் ஏற்படலாம். அதற்காக 'பட்டைகள்' சில பயன்படுவதாகவும் பாடுகின்றனர். "கை கால் முறிய காலுக்கு மருந்தும் தேடிக் கட்டு" எனவும் 'மாம்பட்டை, மருதம் பட்டை...' எனவும் பாடுகின்றனர். அத்துடன் இப்பாடலினூடாக உற்சாகமும் அதேவேளை ஒற்றுமை, சகிப்புத்தன்மை, உதவி செய்யும் மனப்பாங்கு, ஒன்றிணைந்து செயற்படும் தன்மை போன்ற இன்னோரன்ன சிறப்பான அறிவுரை பெட்டகத்தையும் காணமுடிகிறது.

(தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சாகமாக இருங்கள் (Be enthusiastic)

"உற்சாகமில்லாமல் பெரிதாக எதுவுமே எப்போதுமே சாதிக்கப்பட்டதில்லை"

■ ரால்ஃப் வால்டோ எமர்சன்



உற்சாகமும் வெற்றியும் ஒன்றோடு ஒன்று இணைந்தே போகும். ஆனால், உற்சாகம் முதலில் வருகிறது. உற்சாகம் தன்னம்பிக்கையை ஊக்குவிக்கும், ஒழுங்குணர்வை உயர்த்தும், விசுவாசத்தை வளர்க்கும்; அது விலை மதிப்பு இல்லாதது. உற்சாகம் தொற்றுத்தன்மை உடையது. ஒருவர் பேசும் முறையிலிருந்தோ அல்லது நடக்கும் முறையிலிருந்தோ அல்லது கைகுலுக்கும் முறையிலிருந்தோ நீங்கள் உற்சாகத்தை உணரலாம். உற்சாகம் என்பது ஒருவர் முயன்று பெறவும் பயிற்சி செய்யவும் கூடியதொரு பழக்கமாகும்.

பல ஆண்டுகளுக்கு முன் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் டொலர் சம்பாதித்துக் கொண்டிருந்த சார்லஸ் ஷ்வாப்பிடம், "இத்தகையதொரு அதிக சம்பளத்தை அவர் சம்பாதிப்பது இரும்பைத் தயாரிக்கும் அவரது அசாதாரண திறமையினாலா" என்று கேட்கப்பட்டது. சார்லஸ் ஷ்வாப் அதற்கு, "நான் பெற்றிருக்கும் பெரிய சொத்தே மக்களிடையே உற்சாகத்தை எழுப்பும் எனது திறமை; எனது பாராட்டுதலாலும் ஊக்குவித்தலாலும் ஒரு மனிதனுக்கு உள்ளே இருக்கும் சிறந்தவற்றை வெளிக்கொணரும் வழி எனக்குத் தெரியும்" என்று பதிலளித்தார்.

நீங்கள் உயிருடன் உள்ளபோது வாழுங்கள். இறப்பதற்கு முன்பாகவே நீங்கள் இறந்து விடாதீர்கள். உற்சாகமும் விருப்பமும்தான் சராசரியானவரையும் சிறப்பான நிலைக்கு மாற்றும். வெப்பநிலையில் ஒரே ஒரு டிகிரி வித்தியாசத்தில் நீர் ஆவியாக மாறிவிடுகிறது. உலகில் உள்ள பெரிய இயந்திரங்களை இந்த நீராவி இயக்குகிறது. இதுபோலவே நம் வாழ்வில் நாம் எதையும் செய்வதற்கு உற்சாகமானது உதவுகறது.

உங்களால் வெல்ல முடியும் என்ற நூலிலிருந்து

**ஹதீஸ்... (04ஆம் பக்கத் தொடர்...)**

**03. சுக துக்கங்களின்போது பூரண நட்பைத் தருவான்**

எமக்கு ஏற்படுகின்ற இன்ப துன்பங்களின் போது எம்மோடு ஒன்றாக இருந்து மனதுக்கு ஆறுதல் அளிப்பான்

**04. அவசியமான சந்தர்ப்பங்களில் எம்மை தனிமையில் விடமாட்டான்**

கஷ்டங்கள், சிக்கலான நிலமைகளில் எம்மை தனிமையில் விட்டு அதில் இன்பம் காணாது எம்மை அக் கஷ்டத்தின்போது அல்லது தனிமையின்போது உதவும் தன்மையைக் கொண்டிருப்பான்.

**05. நல்ல ஆரோக்கியமான சிந்தனையைத் தருவான்**

எமக்கும் எமது வாழ்க்கைக்கும் நல்ல சிறந்த சிந்தனைகளை தந்து அதன் மூலம் நாம் பயனடைய வழிசமைப்பான்.

**06. தேவையற்ற விடயங்களில் நேரத்தைக் கழிக்க மாட்டான்**


தேவையற்ற விடயங்களில் ஈடுபட்டு வீணாக நேரத்தை கழிப்பதற்கு மாற்றமாக பயனுள்ள வழியில் தனது நேரத்தைச் செலவிடுபவனாக இருப்பதுடன் எம்மையும் அப்பழக்கத்திற்கு உள்ளாக்குவான்.

**07. தவறுகளுக்கு தூண்ட மாட்டான்.**

தவறுகளுக்கும் பாவங்களுக்கும் தூண்டுதலாக இருக்காது அத்தவறுகளிலிருந்தும் பாவங்களிலிருந்தும் எம்மைப் பாதுகாத்து சுவனம் நுழைய வழியேற்படுத்துவான்.

இத்தகைய நற்பண்புகளையுடைய நண்பர்களைத்தான் நாம் தெரிவு செய்ய வேண்டும். அந்நண்பர்களின் மூலம் நல்ல மனிதர்களாக வாழ முயற்சிக்க வேண்டும். இது எமது ஈருலக வாழ்வுக்கும் விமோசனத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- பகுதி A இலிருந்தும் பகுதி B இலிருந்தும் எவையேனும் 5 வினாக்கள் வீதம் மொத்தமாக 10 வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
- ஒவ்வொரு வினாவிற்கும் 10 புள்ளிகள் வீதம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.
- வட்டத்தின் பரப்பு $\pi r^2$, உருளையின் கனவளவு $\pi r^2 h$

## பகுதி A

**01.**

> இறக்குமதி செய்யப்படும் எந்தப் பொருளுக்கும் 30% வரி அறவிடப்படும்.
> -சுங்கவரித் திணைக்களம்

சகி ரூ. 30000 பெறுமதியான கணினி சிலவற்றை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறான்.

i. ஒரு கணினிக்காக அவன் செலுத்த வேண்டிய வரித்தொகை யாது? (3 புள்ளிகள்)

ii. வரி செலுத்திய பின்னர் கணினி ஒன்றின் பெறுமானம் யாது? (2 புள்ளிகள்)

iii. ஒரு கணினியை அவன் ரூ. 48750 இற்கு விற்றால் அவன் அடைந்த இலாபச் சதவீதம் யாது? (3 புள்ளிகள்)

iv. அவன் 40 கணினிகளை விற்றிருந்தால் அவனுக்கு கிடைக்கும் மொத்த இலாபம் யாது? (2 புள்ளிகள்)

**02.** சார்பு $y = 3 - 2x^2$ இன் $x$ இன் பெறுமானங்களுக்கான $y$ இன் பெறுமானங்கள் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| $x$ | -3 | -2 | -1 | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | -15 | -5 | ..... | 3 | 1 | -5 | -15 |

a. $x$ இன் அச்சில் 10 சிறு பிரிவுகள் ஒரு அலகாகவும் $y$ அச்சில் 10 சிறு பிரிவுகள் இரு அலகாகவும் கொண்டு வரைபை வரைக. (4 புள்ளிகள்)

b. உமது வரைபிலிருந்து

i. சார்பின் உயர்வுப் பெறுமானம் யாது? (1 புள்ளி)

ii. சமச்சீர் அச்சின் சமன்பாட்டைக் காண்க? (1 புள்ளி)

iii. சார்பு நேராகும் $x$ இன் பெறுமான வீச்சைக் காண்க. (2 புள்ளிகள்)

iv. சார்பு -5 இலிருந்து +3 இன் வரை அதிகரிக்கும் $x$ இன் பெறுமான வீச்சு யாது? (2 புள்ளிகள்)


**03.** i. சுருக்குக. $\frac{2}{(x-1)} - \frac{2}{3(x+2)}$

ii. விரித்து எழுதுக. $(3a-1)^3$

iiii. காரணி காண்க. $(125 + k^3)$

**04.**

a. ஒரு வீட்டிலிருந்து $(H)$ மேற்குத் திசையில் $30m$ தூரத்தில் மரம் $(T)$ ஒன்று நிற்கின்றது. மரத்திலிருந்து தெற்கு திசை $30\sqrt{3}m$ தூரத்தில் கிணறு $(W)$ ஒன்று காணப்படுகின்றது.





i. வீட்டிற்கும் கிணற்றிற்குமிடையிலான கிட்டிய தூரத்தைக் காண்க. (3 புள்ளிகள்)

ii. $T\hat{H}W$ இன் பெறுமானத்தைக் காண்க. (2 புள்ளிகள்)

iii. $H$ இலிருந்து $W$ இற்கு திசைகோள் யாது? (2 புள்ளிகள்)

b. சதுரம் $ABCD$ இன் மீதுள்ள ஒரு புள்ளி $E$ ஆகும். $AE = 12cm$, $DE = 9cm$ எனின், சதுரம் $ABCD$ யின் பரப்பு யாது? (3 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




05.
- ▶ முதலாம் வருட முடிவில் ரூபா 24200 ஆகவும், பின் மீண்டும்
- ▶ இத்தொகை இரண்டாம் வருட முடிவில் ரூபா 26620 ஆகவும் மாறியது.

i. வட்டி, முதலாம் வருடத்திலும் பார்க்க இரண்டாம் வருடத்தில் எவ்வளவு அதிகரித்துள்ளது?


ii. அவர் பெற்ற கடனுக்கான வருட வட்டி சதவீதத்தைக் காண்க.

iii. ஆரம்பத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

iv. மேலே அவர் பெற்ற கடன் தொகையை எளிய வட்டிப்படி இதே வருட வட்டி சதவீதத்தில் பெற்றிருப்பாராயின் அவர் கட்டவேண்டிய இரு வருடத்திற்கான வட்டித் தொகை யாது?

v. கூட்டு வட்டியிலும் பார்க்க எளிய வட்டித் தொகை எவ்வளவு குறைவாகும்?

06. கலைவிழா ஒன்றில் கலந்துகொள்ள வந்தவர்களில் கைபேசிப் பாவனை பற்றி ஆராய்ந்த போது அனைவரிடமும் கைபேசி காணப்பட்டது. அவற்றின் வகை பற்றிய தகவல் வென்னுருவில் தரப்பட்டுள்ளது.




a.

i. எத்தனை பேர் விழாவிற்கு வந்துள்ளனர்? (1 புள்ளி)

ii. Nokia கைப்பேசி வைத்திருந்தவர்கள் எத்தனை பேர்? (1 புள்ளி)

iii. கமரா காணப்பட்ட கைப்பேசி பாவனையாளர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iv. Nokia தவிர்ந்த ஏனைய கைப்பேசி பாவனையாளர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

v. நிழற்றப்பட்ட பிரதேசத்தை விபரிக்குக. (1 புள்ளி)

b. ஒருவர் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டால் அவர்

i. Nokia பாவனையாளராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

ii. கமரா வசதியற்ற கைப்பேசி பாவனையாளராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?

## பகுதி B

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

06. 'பக்தி' தொலைக்காட்சி நிறுவனம் நடத்திய வினா-விடைப் போட்டியொன்றின் நிபந்தனைகளும் ஒவ்வொரு வினாவுக்குமுரிய பரிசுத் தொகையும் தரப்பட்டுள்ளன.

| வினா இலக்கம் | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| பரிசு | 1200 | 1300 | 1400 | 1500 | 1600 |

நிபந்தனை: - ஒவ்வொரு வினாவுக்கும் தனித்தனியே பரிசுத் தொகை வழங்கப்படும். பிழையான விடையளிக்கும்போது போட்டியாளர் போட்டியிலிருந்து நீக்கப்படுவதோடு அதுவரை சரியான விடையளித்த வினாக்களுக்குரிய பரிசுத் தொகை மொத்தமாக வழங்கப்படும்.

i. இரண்டு வினாக்களின் பரிசுத்தொகைகளுக்கு இடையிலான பொது வித்தியாசம் யாது? (1 புள்ளிகள்)

ii. 8ம் வினாவுக்கு சரியான விடைக்கான பரிசுத் தொகை யாது? (2 புள்ளிகள்)

iii. nம் வினாவுக்கான பரிசுத் தொகையை $100(n+11)$ எனக் காட்டுக. (2 புள்ளிகள்)

iv. எந்த வினாவின் சரியான விடைக்கு ரூ. 2100 பரிசுத் தொகை வழங்கப்படும். (2 புள்ளிகள்)

v. 12 வினாக்களைக் கொண்ட இப்போட்டியில் ஒருவர் அனைத்து வினாக்களுக்கு விடையளித்தால் அவருக்கு கிடைக்கும் மொத்த தொகை யாது? (3 புள்ளிகள்)

07. கவராயம், $cm/mm$ அளவிடையுடைய நேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளிம்பு என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தி,

i. $AB = 7cm$, $B\hat{A}C = 30^0$, $A\hat{B}C = 60^0$ ஆக வுள்ள $\Delta ABC$ யை அமைக்க.

ii. $BD = CD$ ஆகுமாறு $A\hat{B}D = 90^0$ ஆக இருக்கும் வண்ணமும் புள்ளி $A$ இற்கு எதிர்த்திசையில் புள்ளி $D$ யைக் குறித்து நாற்பக்கல் $ABCD$ யைப் பூர்த்தி செய்க.

iii. $D$ யை மையமாகவும் $BD$ யை ஆரையாகவும் கொண்டு வட்டமொன்றை வரைக.

iv. $AC$ இற்கு சமாந்திரமாக $BE$ ஐ அமைக்க. இங்கு $E$ வட்டத்தின் மீது உள்ளது.

08. தென்னந் தோட்ட உரிமையாளர் ஒருவர் தனது 4 தோட்டங்களில் ஒரு தோட்டத்தில் பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை பற்றிய பரம்பல் தரப்பட்டுள்ளது.

| தே. எண்ணி | நா. பெறுமானம் $(x)$ | மீடிறன் $(f)$ | $fx$ |
|---|---|---|---|
| 9-15 | 12 | 4 | |
| 16-22 | 19 | 7 | |
| 23-29 | ....... | 9 | |
| 30-36 | 33 | 5 | |
| 37-43 | 40 | 2 | |
| 44-50 | ....... | 1 | |
| | | | |


i. $x$, $fx$ நிரல்களைப் பூரணப்படுத்துக. (3 புள்ளிகள்)

ii. ஒரு மரத்தில் பறிக்கப்பட்ட தேங்காய்களின் எண்ணிக்கையின் இடைப் பெறுமானத்தை முழு எண்ணில் தருக. (3 புள்ளிகள்)

iii. 28 மரங்கள் வீதம் உள்ள இத்தகைய 4 தோட்டங்களிலும் அவரால் பறிக்கப்பட்ட தேங்காய்கள் மொத்த எண்ணிக்கை யாதாக இருக்குமென எதிர்பார்க்கின்றீர்? (2 புள்ளிகள்)

iv. இதே ஒழுங்கில் ஒரு தோட்டத்தில் பறிக்கப்படும் அதிகூடிய தேங்காய்களின் எண்ணிக்கை 791 என தோட்ட உரிமையாளர் கூறுகிறார். இதனை நீர் ஏற்றுக்கொள்கின்றீர்களா? (2 புள்ளிகள்)

09. உருவில் $4a$ விட்டமும் $l$ நீளமும் உடைய உருளை வடிவத் திண்மங்கள் குற்றி ஒன்றிலிருந்து $2a$ அடியையும் $2a$ உயரமும் உடைய அரியமொன்று குடைந்தெடுக்கப்பட்டது.




i. நிழற்றிய பகுதியின் பரப்பினை $a$, $\pi$ சார்பில் தருக.

ii. உருவின் கனவளவின் $2a^2 l(2\pi - 1)$ எனக் காட்டுக.

iii. இத்திண்மத்தின் கனவளவு $V$ எனின்

$$a = \sqrt{\frac{7v}{74l}}$$ எனக் காட்டுக.

iv. $V = 51800cm^3$, $l = 1m$ எனின் $a$ இன் பெறுமானத்தை மடக்கை அட்டவணையைப் பயன்படுத்திக் காண்க.

10. சரியான விடைக்கு 2 புள்ளிகள் வழங்கப்படும். பிழையான விடைக்கு 1 புள்ளி குறைக்கப்படும்.

50 வினாக்கள் கொண்ட பரீட்சை வினாத்தாளில் அன்ஜலோ மத்தியூஸ் 61 புள்ளி பெற்றான் எனின்,

i. சரியான விடையளித்த வினாக்கள் $x$ எனவும் பிழையான விடையளித்த வினாக்கள் $y$ எனவும் கொண்டு இருசமன்பாடுகளை உருவாக்குக.


ii. சரியான விடையளித்த வினாக்களின் எண்ணிக்கை யாது?

iii. தான் 75% இலும் அதிகமான வினாக்களுக்கு சரியாக விடையளித்ததாக அவர் கூறுகிறார். இதை நீர் ஏற்றுக் கொள்கின்றீரா? காரணம் தருக.

11. a. இணைகரம் $ABCD$ இல் கோணங்கள் $D$, $C$ இன் இரு கூறாக்கிகள் $E$ இல் சந்திக்கின்றன.

(41ஆம் பக்கம் பார்க்க...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 10, 11 தர மாணவர்களுக்கு விஞ்ஞானம்

ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## தரம் 10 உயிரியல் - மனித உடலின் பிரதான தொகுதிகள்

- உடல் முழுவதும் பதார்த்தங்களைக் கடத்தும் பணி குருதிச் சுற்றோட்டத் தொகுதி மூலம் நடைபெறுகின்றது. இதன் மையமாக விளங்குவது இதயம் ஆகும்.
- இதயத்திலிருந்து வெளியேறும்போது நாடிகள் ஊடாகவும், இதயத்துள்ளே பாயும்போது நாளங்கள் ஊடாகவும், உறுப்புகளினுள் பாயும் போது குருதி மயிர்க் குழாய்களினூடாகவும் குருதி பாய்கிறது.

*01.* மனித உடலின் குருதிச் சுற்றோட்டத்தின் இரு அங்கங்களில் நடைபெறும் சுற்றோட்டத்தை கீழ்வரும் உரு காட்டுகின்றது.




i. இங்கு X, Y என்பன குறிக்கும் அங்கங்களை எழுதுக.

ii. P, Q, R, S என்பன குருதிக்கலன்களாகும். இவற்றின் பெயர்களை தனித்தனியாக எழுதுக.

iii. குருதிக்கலன் R ஆனது ஏனையவற்றை விடக் கொண்டிருக்கும் சிறப்பம்சங்கள் இரண்டை எழுதுக.

iv. இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் என்றால் என்ன?

v. உயர் ஒட்சிசன் செறிவுடைய குருதியைக் கொண்டு செல்லும் நாளம் எது?

- இதயம் இதயத் தசையினால் ஆக்கப்பட்ட உறுப்பு ஆகும். இவற்றின் சோணையறைச் சுவர்களை விட இதயவறைச் சுவர்கள் அதிக தடிப்புடையவை. உயர் குருதி அழுத்தத்திற்கு ஈடுகொடுப்பதற்காக இவ்வாறு காணப்படுகின்றது.
- சந்தத்திற்குரிய முறையில் இதயம் சுருங்கி விரிதல் இதயத் துடிப்பு எனப்படும். இதுவே உடல் முழுவதும் குருதி சுற்றியோடுவதற்கு உதவுகின்றது.

  ஒரு பூரண இதயவடிப்பின் போது இதயத்தில் நிகழும் 4 வகையான நிகழ்வுகளின் தொடர் ஒழுங்கு இதயவட்டம் எனப்படும்.
- இதயத் தொழிற்பாட்டைப் பாதிக்கும் குறைபாடுகளாக இதயம் செயலிழத்தல், இதயத்தில் துளை காணப்படல், வால்வுகளில் குறைபாடு இருத்தல் என்பன விளங்குகின்றன.

  முடியுருநாடிகளில் கொலஸ்திரோல் படிவதனால் அல்லது அது குருதித் திரட்சி மூலம் அடைபடுவதனால் இதயம் செயலிழக்கும்.
- நாடிகளில் கொலஸ்திரோல் படிவுற்று ஏற்படும் தடைகள் உயர் குருதி அழுத்தத்திற்குக் காரணமாகின்றன. நாளங்களில் வால்வுகள் பலவீனமடைவதால் நரம்பு முடிச்சிடல் (வரிக்கோசு) எனும் நோய் ஏற்படுகிறது.
- நிணநீர்த் தொகுதியானது மேலதிக இழையப் பாய்பொருளை குருதியுடன் சேர்த்தல், நோய்க் கிருமிகளை ஆழிக்கும் நீர்ப்பீடனச் செயற்பாட்டில் பங்குகொள்ளல் எனும் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது.
- நிணநீர்ப்பாயம் குருதிக் கலங்களையோ (நிணநீர்க்குழியம் தவிர்ந்த), குருதிப்புரதத்தையோ கொண்டிராது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவாசத் தொகுதி

- உயிர்த்தொழிற்பாடுகளுக்குத் தேவையான ஒட்சிசனைப் பெற்றுக் கொடுப்பதும் உற்பத்தி செய்யப்படும் காபனீரொட்சைட்டை வெளியேற்றவும் காணப்படும் தொகுதி சுவாசத் தொகுதி ஆகும்.
- சுவாசப்பைகள் நெஞ்சறையினுள் அமைந்துள்ளன. இதனைச் சூழ புடைக்குழிப்பாய்மம் கொண்ட புடைச் சவ்வுகள் உள்ளன. இதன் பாய்மம் பின்வரும் வழிகளில் உதவும்.
  - i. சுவாசப்பையை புறத் தாக்கங்களிலிருந்து (அதிர்ச்சிகளில்) பாதுகாக்கும்.
  - ii. உராய்வு நீக்கியாகத் தொழிற்படும்.

02. மூக்குக்குழி, தொண்டை, மூச்சுக் குழல்வாய் மூடி, வாதனாளி, சுவாசப்பைக் குழாய்கள், சுவாசப்பைச் சிற்றறைகள் ஆகியன சுவாசத் தொகுதியின் அடிப்படைக் கூறுகளாகும்.
  - i. வாதனாளி, சுவாசப்பைக் குழாய், சுவாசப்பைச் சிறுகுழாய் என்பவற்றில் கசியிழைய வளையங்கள் இருப்பதன் நன்மை யாது?
  - ii. மூக்கின் வழியாக சுவாசிக்கும்போது நாசிக்குழியில் ஏற்படும் மாற்றங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
  - iii. சுவாசப்பைச் சிற்றறையொன்றில் நிகழும் வாயுப்பரிமாற்றச் செயன்முறையைப் பின்வரும் உரு காட்டுகின்றது.




  - a) x, y குறிக்கும் வாயுக்களைளைப் பெயரிடுக.
  - b) z என்பது எக்கலம் ஆகும்?
  - c) வாயுப்பரிமாற்றத்தை வினைத்திறனாக மேற்கொள்ள சிற்றறைகள் கொண்டிருக்கும் சிறப்பியல்புகள் மூன்றை எழுதுக.
  - d) இங்கு குருதியினால் எடுத்து செல்லப்படும் வாயு கலச்சுவாசத்திற்குப் பயன்படும். கலச்சுவாசச் செயன்முறைக்குரிய சமப்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

## சமிபாட்டுத் தொகுதி

- மனித சமிபாட்டுத் தொகுதியானது உணவுக் கால்வாய், அதனுடன் தொடர்பான சுரப்பிகள் என்பவற்றைக் கொண்டது. இதன் முக்கிய இரு தொழில்களாவன;
  - i. உணவை சமிபாடடையச் செய்தல்.
  - ii. சமிபாடடைந்த கூறுகளை அகத்துறிஞ்சுதல்.
- உணவுச் சமிபாடு இரு வகைப்படும்.
  - i. **பொறிமுறைச் சமிபாடு:**

    பற்கள் இரைப்பைச் சுவரினால் நடைபெறுவது.

    உணவுக் கூறுகள் பௌதிகரீதியாக சிறு கூறுகளாக்கப்படும்.
  - ii. **இரசாயனச் சமிபாடு:**

    நொதியங்கள் மூலமாக நடைபெறுவது.

    உணவுக்கூறுகள் இரசாயனரீதியாக மாற்றப்படும்.

*இரசாயனச் சமிபாடு:*

| இடம், சுரப்பு | நொதியம், இரசாயன மாற்றம் |
|---|---|
| வாய்க்குழி – உமிழ்நீர் (கார ஊடகம்) | மாப்பொருள் —அமைலேசு→ மொல்றோசு |
| இரைப்பை – உதரச்சாறு (அமில ஊடகம்) | புரதம் —பெப்சின்→ பல்பெப்தைட்டு ரெனின் பாலைத் திரளச் செய்யும் (குழந்தைகளுக்கு) |
| முன்சிறு குடல் சதையச்சாறு (காரஊடகம்) | புரதம் —திருச்சின்→ பல்பெப்தைட்டு<br>மாப்பொருள் —அமிலேசு→ மோல்றோசு<br>இலிப்பிட்டு —இலிப்பேசு→ கொழுப்பமிலம்+ கிளிசரோல் |
| சிறுகுடல் குடற்சாறு | மோல்றோசு —மோல்றேசு→ குளுக்கோசு<br>சுக்ரோசு —சுக்ரேசு→ குளுக்கோசு + பிரக்ரோசு<br>இலக்றோசு —இலக்றேசு→ குளுக்கோசு + கலக்றோசு<br>பல்பெப்தைட்டு —பெப்திடேசு→ அமினோவமிலம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கழிவகற்றல் தொகுதி

- உயிர்க்கலங்களினுள் நடைபெறும் அனுசேபச் செயற்பாடுகளில் உருவாகும் மேலதிக பய னற்ற பொருட்களை அகற்றும் செயற்பாடு கழிவகற்றல் எனப்படும். இது பின்வரும் வழிகள் மூலம் நடைபெறுகிறது.
  - i. சிறுநீரகங்களினால் சிறுநீர் வடிக்கப்பட்டு அகற்றப்படல்.
  - ii. சுவாசப்பை மூலம் நீராவி, காபனீரொட்டு அகற்றப்படல்.
  - iii. தோலினூடாக வியர்வை வெளியேற்றப் படல்.
  - iv. உணவுச் சமிபாட்டுத் தொகுதி மூலமாக பித்த நிறப்பொருள் அகற்றப்படல்.
- ஈரலினுள் மேலதிக அமினோவமிலம் வேறு நைததரசன் கொண்ட பதார்த்தங்கள் உடைக் கப்பட்டு யூரியா, யூரிக்கமிலம் ஆகியன உற் பத்தி செய்யப்படுகின்றன.

03. நைதரசன் சேர் கழிவுகளை கழிவகற்றலில் பங்கேற்கும் பிரதான உறுப்பு சிறுநீரகங் களாகும்.

i. சிறுநீரகங்களின் தொழிற்பாட்டு அலகாக விளங்கும் அமைப்பு எது?

ii. கலன்கோள வடிதிரவத்தில் காணப்படு வதும் சிறுநீரில் காணப்படாததுமான கூறுகள் இரண்டைக் குறிப்பிடுக.

iii. சிறுநீரில் காணப்படும் நைதரசனைக் கொண்ட கழிவுப்பொருட்கள் இரண்டை எழுதுக.

iv. சிறுநீரகங்களினால் ஆற்றப்படும் கழிவ கற்றல் தவிர்ந்த வேறு தொழிற்பாடுகள் இரண்டை எழுதுக.

v. சிறுநீரகங்களிலும் சிறுநீர்ப்பைகளிலும் கற்கள் உருவாவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகள் மூன்றை எழுதுக.

## தரம் II இரசாயனவியல் - வாயுக்களின் நடத்தைக் கோலங்கள்

- வாயுக்களுக்கு குறித்த வடிவமோ, குறித்த கனவளவோ இல்லை. இவை மூடிய முழுத் தொகுதியின் கனவளவையும் எடுக்கும்.
- வாயுக்களை அதிகளவில் நெருக்க முடியும். காரணம், இவற்றின் துணிக்கைகள் மிக ஐதாக இருப்பதுடன் அவை சுயாதீனமாக இயங்கு வதும் ஆகும்.
- வாயுக்களின் நடத்தையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்;
  - i. வெப்பநிலை (T)
  - ii. அமுக்கம் (P)
  - iii. கனவளவு (V)
  - iv. பதார்த்த அளவு (M)
- வாயுக்கள் தொடர்பான விதிகள்:

*பொயிலின் விதி*

மாறா வெப்பநிலையில் குறித்த திணிவு வாயுவின் அமுக்கம் அதன் கனவளவிற்கு நேர்மாறு விகித சம னாகும். $\left(p x \alpha \frac{1}{V}\right)$ PV = K (T), (m)

*சாள்சின் விதி*

மாறா அமுக்கத்தில் குறித்தளவு வாயுவின் கனவளவு அதன் தனி வெப்பநிலைக்கு நேர்விகித சமனாகும்.

$(V \alpha T)$ $\frac{V}{T} = K$ (P), (M)

01. i. 200K வெப்பநிலையில் வாயு மாதிரி யொன்றின் கனவளவு $300cm^3$ ஆகும். இதன் அமுக்கம் மாறாதளவில் இருக்கும் போது வாயுக் கனவளவை $450cm^3$ ஆக அதிகரிப்பதற்கு வெப்ப நிலையை எவ்வ ளவினால் அதிகரிக்க வேண்டும்.

$450cm^3$ கனவளவில் வெப்பநிலை = T2 என்க.

$$\frac{V_1}{T_1} = \frac{V_2}{T_2}$$

$$\frac{300}{200} = \frac{450}{T_2}$$

$$T_2 = \frac{450 \times 200}{300}$$

$$T_2 = 300K$$

வெப்பநிலை $300K$ ஆக இருப்பதற்கு வெப் பநிலையை $100K$ இனால் அதிகரிக்க வேண் டும்.

ii. மேற்படி வாயுவின் நடத்தையுடன் தொடர்பு படும் விதி எது? சாள்சின் விதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வெவ்வேறு கரைசல்கள், அவற்றின் உப யோகங்கள்*

- கரைசல்களை அதில் அடங்கும் பதார்த் தங்களின் இயல்பிற்கேற்ப இரு வகைப்படும்.
  - i. *ஏகவினக் கலவை:*

    உ+ம் சீனிக் கரைசல், கலப்புலோகம்

    இவற்றில் கலவை முழுவதும் கூறுகளின் விகிதம் மாறாத அளவில் இருக்கும்.
  - ii. *பல்லினக் கலவை:*

    உ+ம் சுண்ணாம்புக் கரைசல்

    இவற்றில் கலவை முழுவதும் கூறுகளின் தோற்றம், விகிதம் சமனற்றதாக இருக்கும்.
- கரைப்பான்கள் முனைவுத் தன்மையின் அடிப்படையில் இரு வகைப்படும்.
  - i. *முனைவுக் கரைப்பான்:*

    உ+ம் $H_2O$, $C_2H_5OH$

    இவற்றில் O-H, N-H, H-F, C = O பிணைப் புகளில் ஒன்றேனும் இருக்கும்.
  - ii. *முனைவற்ற கரைப்பான்:*

    உ+ம் $CS_2$, $C_6H_{14}$ இவற்றில் சமச்சீரான பிணைப்புகள் காணப்படும். அவற்றில் முனைவுத் தன்மை ஏற்படாது.
- கரைப்பான்கள் அவற்றில் அடங்கியுள்ள கூறு களின் அடிப்படையில் இரு வகைப்படும்.
  - i. *சேதனக் கரைப்பான்:*

    உ+ம் $C_2H_5OH$, $C_6H_{14}$

    இவற்றில் C,H இரண்டும் கூறுகளாகக் காணப்படும்.
  - ii. *அசேதனக் கரைப்பான்:*

    உ+ம் $H_2O$, $CS_2$, $NH_3$

    இவற்றில் C,H இரண்டும் ஒன்றாகக் காணப்படாது.

- கரைசல்களின் செறிவைக் குறிப்பிட பொது வான முறைகள் பல உள்ளன. செறிவைக் குறிப் பிடும் நியம முறை பின்வருமாறு:

$$C = \frac{n}{v}$$

*01.* i. *60g யூரியாவைக் கரைத்து 500ml யூரியாக் கரைசல் தயாரிக்கப்படின் அக்கரைசலின் செறிவு யாது?*

(C = 12, H = 1, O = 16, N =14)

யூரியாவின் சார் மூலக்கூற்றுத் திணிவு = 60

∴ 60g யூரியாவின் மூல் அளவு

$$(n) = \frac{60}{60} = 1 \text{மூல்}$$

கனவளவு $$(V) = \frac{500}{1000} dm^3 = \frac{1}{2} dm^3$$

∴ செறிவு $$c = \frac{n}{v} = \frac{1}{1/2} = 2 mol dm^{-3}$$

ii. *கறியுப்பு நீரில் கரையுமாயினும் அது மண்ணெண்ணெயினுள் கரைவதில்லை. இதன் காரணத்தை விளக்குக.*

கறியுப்பு முனைவுத் தன்மையுடைய அயன் சேர்வையாகும். எனவே, அது முனைவுத் தன்மையுடைய நீரில் கரையும். எனினும் மண்ணெண்ணெய் முனைவுத் தன்மை யற்றதனால் அதில் கரையாது.

iii. *கரைதிறன் என்றால் என்ன?*

குறித்த வெப்பநிலையில் மேலதிக கரை யத்தின் முன்னிலையில் கரைப்பானில் கரையும் கரையத்தின் உச்ச அளவு அக்க ரையத்தின் கரைதிறன் ஆகும்.

## கவலைப்படுவதை மார்க்கம் விரும்பவில்லை...!

கவலைப்படுவதை மார்க்கம் தடை செய்து உள்ளது. இறைவன் கூறுகிறான்:

"நீங்கள் தைரியத்தை இழக்க வேண்டாம். கவலைப்படவும் வேண்டாம்." (அல்குர்ஆன் 3: 137)

"நீங்கள் கவலைப்படாதீர்கள்! நிச்சயமாக இறைவன் நம்முடன் இருக்கின்றான்."

(அல்குர்ஆன் 9: 40)

கவலை நம் உணர்வுகளைச் சாகடிக்கும்; மன உறுதியைக் குலைக்கும்; ஆன்மாவைச் செயலிழக்கச் செய்யும். கவலை வாழ்க்கையை ஊனமாக்கும் காய்ச்சல். கவலை நம்மை செயல்பட அனுமதிக்காது. கவலையால் உள்ளத்திற்கு எந்த நன்மையும் ஏற்படாது.

கவலைப்படாதே என்ற நூலில் இருந்து
■ டாக்டர் ஆயிழ் அல்கர்னீ ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உம்மா

இரவில் நான் கண்மூடித்தூங்கும் போது – நீ
கண்விழித்திருந்து பாதுகாக்கிறாய் உம்மா – ஆனால்
பகலில் நான் கண்விழித்து இருக்கும் போது – என்
கண்ணெதிரே கஷ்டப்படுகிறாயே என் உம்மா

தந்தையின் கஷ்டம் ஊரறிவார் – இங்கு
என் அன்னையின் கஷ்டம் யாரறிவார்
தந்தையில் மேலானாவள் என் தாயே
தங்கத்தில் மேலானவளும் என் தாயே

உலகமே அழிந்தாலும் ஒன்று மட்டும்
நிலைத்திருக்கும்
அதுதான் உன் அன்பு
என் அன்பு அன்னையே!

உயிர்களுள் சிறந்தது மனிதன்
மனிதனுள் சிறந்தது பெண்கள்
பெண்களுள் சிறந்தது நீ தானே
என் உம்மா

பத்துமாதங்கள் கருவில் என்னைச் சுமந்து
பட்ட கஷ்டம் யாருக்கும்மா தெரியும் – பின்
என்னைப் பெற்றெடுத்து – நீ
பெற்ற இன்பத்திற்கு யாரும்மா நிகர்.

உடம்பில் சிறந்தது கண்
அன்பில் சிறந்தது உன் அன்பு தானே
என் உம்மா



ஐ.ஏ.எம். இஸாம்
தரம்: 09
பொ/ அல்ஹிலால் ம.க. தம்பளை

# கண்கள் கனாகி கனவுகள்

தாயே!
என் கனவுலகில் மட்டுமே
வைக்க முடிந்தது உன் நினைவுகளை
தரணியில் நான் தனித்திருக்க
எங்கு சென்றாய் என்னை விட்டு?

என்னை பெற்றெடுத்த வலியில்தான்
உன் உயிர் பிரிந்திருக்க
வேண்டுமென்றால்...
எனைப் பெறாமலே இருந்திருக்கலாம்.

உன் புனிதமான தாய்மைக்காக
நான் கேட்கும் துஆ
நிச்சயம் என்னையும் உன்னையும்
அல்லாஹ்வின் சந்நிதானத்தில்
ஒன்றிணைக்கும்



சபிய்யா பின்த் முத்தலிப்
தரம்: 11
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.

# பெண்ணே!

பெண்ணே!....
நாட்டிற்கு தௌபா செய்யும் – நீ
வீட்டிற்குள் அடைந்து விடுவது – ஏனோ?

சீர் திருத்தம் செய்ய வேண்டிய – நீ
சீர் கேட்டிற்கு ஆளாகுவது – ஏனோ!
பெறுமதிமிக்க பணத்தைக் கொடுத்து
அரை குறை ஆடை அணிவது ஏனோ?

அடக்கமாய் இருக்க வேண்டிய – நீ
ஆடம்பர வாழ்க்கை வாழ்வது – ஏனோ!
நாட்டின் கண் என போற்றப்படும் – நீ
உலகின் வழிகேட்டிற்கு ஆளாவது – ஏனோ?

ஸஹாபிய பெண்ணின் வழி வாழ வேண்டிய – நீ
இன்றைய ஜாஹிலிய அந்நியரின்
வழி வாழப் பழகுவது ஏனோ?

பெண்ணே! சற்று சிந்தி...
உனக்கே புரியும்
உன் ஜாஹிலிய நிலை...



எம்.ஏ.எப். அஸீனா
தரம்: 11
பாத்திமா ஸஹ்ரா பெ.அ.க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 45 நிமிடம்

வினாப்பத்திரம் I




ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

கீழ் காணப்படும் ஐந்து சொற்களில் இரு சோடி ஏதோ ஒரு வகையில் ஒன்றுபடும். ஒன்று மட்டும் வேறுபடும். அதனைக் கோடிடுக.

1. மனை, மலர், தங்கம், இளையவன், முதியவன்
2. ஆதி, வழி, அந்தம், பாலம், தெரு
3. மெய், கரம், கை, அவயம், பொய்
4. வரட்சி, சுகதேகி, ஈகை, நோயாளி, கொடை
5. வானம், மரம், குன்று, விருட்சம், பூமி


பின்வரும் படங்களுக்குரிய சரியான சொல்லுக்குக் கோடிடுக.

6. 

   i. திரப்புக்கோர்வை
   ii. திறப்புக்கோர்வை
   iii. துரப் புக்கோர்வை

7. 


   i. பாகற்க்காய்
   ii. பாகற்காய்
   iii. பாகட்காய்

8. 

   i. தென்னங்கீற்று
   ii. தென்னங்கீத்து
   iii. தென்னைகீத்து

9. 

   i. தேனீர்
   ii. தேணீர்
   iii. தேநீர்

10. 

   i. மரவெள்ளி
   ii. மரவள்ளி
   iii. மறவள்லி


பின்வரும் சிங்களச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

11. அபி :.........................
12. கனவா :.........................


பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான கருத்தை எழுதுக.

13. Please :.........................
14. Help :.........................
15. Cool :.........................

பின்வரும் உருக்களோடு தொடர்புடைய சொற்கள் ஒழுங்குப் பிரகாரம் அமைந்த தொகுதியின் கீழ் கீறிடுக.

16. 

   i. பார்வை, கேட்டல், பாதுகாப்பு
   ii. பாதுகாப்பு, பார்வை, கேட்டல்
   iii. பாதுகாப்பு, மறைத்தல், பார்வை

17. 

   i. காற்று, ஆகாயம், நீர்
   ii. ஆகாயம், நீர், பட்டம்
   iii. கப்பல், பட்டம், நீர்

18. பனிக்கட்டி கரையாமல் சில மணித்தியாலங்கள் இருப்பதற்குச் செய்ய வேண்டியவை.

   i. மரத்தூள் போட்டு மூடிவைத்தல்.
   ii. நீரினுள் வைத்தல்.
   iii. கடதாசிப் பெட்டியில் வைத்தல்.

19. இயற்கையான ஒரு திடீர் விபத்து

   i. வாகன விபத்து ii. மண்சரிவு
   iii. யுத்தம்

20. வெப்பமான காலங்களில் தாகத்தைத் தணிப்பதற்காக உண்ணும் பழம்.

   i. வாழைப்பழம் ii. மாம்பழம்
   iii. வத்தப்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. பின்வரும் உணவுப் பொருட்களில் விரைவாக நச்சுத்தன்மை அடையாத் தன்மையுள்ளது எது?

i. இறைச்சி ii. பால் iii. தேன்

22. பின்வரும் பூக்களில் அதிக நறுமணம் வீசும் பூ எது?

i. செவ்வரத்தை ii. மல்லிகை
iii. அந்தூரியம்

23. வியாபாரத்தை விளம்பரம் செய்யப் பயன்படும் ஊடகங்கள்.

i. சுவரொட்டிகள், தொலைக்காட்சி

ii. தொலைக்காட்சி, தபாலகம்

iii. பிரதேச செயலகம், வானொலி

24. மலசலகூடம் அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்பவர்.

i. கிராம சேவையாளர்
ii. பொது சுகாதார உத்தியோகத்தர்
iii. வீடு கட்டுபவர்

25. விரைவாக பழுதடையக்கூடிய பொருள் எது?

i. இறைச்சி ii. மீன் iii. பாண்

26. இரும்பு வேலை செய்வோர் (கொல்லன்) இரும்பிலான பொருட்களை வைத்து தட்டும் உபகரணத்தின் பெயர்.

i. பட்டறைக்கல் ii. கருங்கல்
iii. சீமெந்துக்கல்

27. சிறிய நீர் நிலைகளில் சிறிய மீன்களைப் பிடிக்க பயன்படுத்தும் உபகரணம்.

i. அத்தாங்கு ii. தூண்டில்
iii. வலை

28. உணவுப் பொருட்களை பழுதடையவும் நச்சுத் தன்மையுடையவும் செய்யும் பிராணிகள்.

i. கரப்பான், பூனை ii. எலி, பல்லி
iii. எலி, நாய்

29. தேசிய இலச்சினை பொறிக்கப்பட்டுள்ள இடம்.


i. தேசிய அடையாள அட்டை
ii. நகர சபை iii. வங்கி

30. இலங்கையில் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம்.

i. வில்பத்து ii. குமண
iii. தெஹிவளை

முதல் இரு கட்டங்களையும் அவதானித்து மூன்றாவது கட்டத்தை சரியான விடையுடன் பூர்த்தி செய்க.


31.




32.




33.




சரியான எழுத்துக்களை புள்ளிக்கோட்டில் எழுதி பூரணப்படுத்துக.

34. தாய் தன் புதல்வனை வ....................மேல்
35. வி.................... வைத்து காத்திருந்தாள்

36. கடலில் இ........................ விழுந்தது போல கள்வனுக்கு
37. அ.................... விழுந்தது.

பின்வரும் பறவைகளுக்கான ஒலி மரபுகளைத் தருக.

38. மயில் :......................

39. குயில் :......................

40. ஆந்தை :......................

41. 6 லீற்றர் நிரம்பக்கூடிய நீர்த்தாங்கியில் 5099ml நீர் இருந்தது. 6 லீற்றர் நீர் நிரம்புவதற்கு இன்னும் எத்தனை மில்லி லீற்றர் நீர் ஊற்ற வேண்டும்?


i. 1ml ii. 99ml iii. 901ml

42. என்னிடம் உள்ள பணத்தொகையில் காற்பகுதி தம்பியிடம் உள்ளது. தம்பியிடம் உள்ள பணம் ரூபா 60 எனின் இருவரிடம் இருந்த மொத்த பணம் எவ்வளவு?

i. ரூபா 120.00 ii. ரூபா 240.00
iii. ரூபா 300.00

43. தரப்பட்டுள்ள படத்தில் நிறந்தீட்டப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




i. 16cm
ii. 12cm
iii. 10cm

**44.** 160cm நீளமான கம்பித் துண்டினால் சதுர மான சிறிய யன்னல் ஒன்று செய்யப்பட்டது. சதுரமான யன்னலின் ஒரு பக்க நீளம் யாது?

i. 82m ii. 80cm iii. 40cm

**45.** பின்வருவனவற்றுள் எவை ஊன் உண்ணிப் பறவைகள்.

i. காகம், கழுகு ii. கழுகு, பருந்து
iii. பருந்து, கிளி

**46.** பின்வருவனவற்றுள் முன்னங்கால்களை கையாகப் பயன்படுத்தும் பிராணி.

i. யானை ii. அணில் iii. கிளி

**47.** கடலுக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு நகரம்.

i. அம்பாந்தோட்டை ii. கண்டி
iii. இரத்தினபுரி

**48.** கோடை காலங்களில் இலைகள் உதிர்ந்து விடும் ஒரு தாவரம்.

i. ஈரப்பலா ii. மா
iii. இறப்பர்


**49.** அரிசியிலுள்ள கல்லை வேறாக்கப் பயன்ப டுத்தும் ஓர் உபகரணம்.

i. உரல் ii. சுளகு
iii. அரிக்கன் சட்டி

**50.** மின்னேரியாக் குளத்தைக் கட்டுவித்த மன்னன்.

i. மகாசேனன் ii. விஜயன்
iii. பண்டுகாபயன்


**கணிதம்... (33ஆம் பக்கத் தொடர்...)**




i. $D\hat{E}C = 90^0$ எனவும் (2 புள்ளிகள்)

ii. $\Delta ADE$ ஒரு இரு சமபக்க முக்கோணி எனவும் நிறுவுக. (3 புள்ளிகள்)

**உருவிலுள்ள தரவுகளை அவதானித்து**





i. $R\hat{S}Q = 2R\hat{P}S$ எனவும் (2 புள்ளிகள்)

iii. $R\hat{P}S + R\hat{Q}P = 90^0$ எனவும் காட்டுங்கள் (3 புள்ளிகள்)

**12.** $O$வை மையமாக கொண்ட வட்டத்தில் $KM$ விட்டமாகும்.

பின்வருவனவற்றை காண்க.




i. $K\hat{N}M, K\hat{O}L$ இற்கிடையிலான தொடர்பு யாது? (1 புள்ளி)

ii. $K\hat{M}L$ இற்கு சமமான பருமனுடைய கோண மொன்று தருக. (1 புள்ளி)

iii. இரு சமபக்க முக்கோணி இரண்டைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

iv. $L\hat{N}M = K\hat{L}O$ எனக் காட்டுக. (3 புள்ளிகள்)

v. $L\hat{K}O, K\hat{N}L$ என்பவற்றின் கூட்டுத்தொகை நிரப்பு கோணமெனக் காட்டுக. (5 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்


வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

பின்வரும் படத்தை அவதானித்து பொருத்தமான மற்றுமொரு வாக்கியத்தை எழுதுக.

1.




i. இது மோப்ப சக்தி உடையது.

ii. நன்றி உள்ள மிருகம் என்பர்.

iii. ....................................

2.




i. இது பிளிறும்.

ii. இது ஒரு தாவர உண்ணி.

iii. ....................................

3.




i. இதில் பல இனங்கள் காணப்படும்.

ii. இது நீந்தும்.

iii. ....................................

4.



i. இதில் அதிகமானோர் பயணம் செய்யலாம்.

ii. பெறுமதிமிக்கது.

iii. ....................................

முன்னால் உள்ள சொற்களை அவதானித்து விடை எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 5. | ஆடு | : | இடையன் |
| | யானை | : | .................. |
| 6. | ஆந்தை | : | அலறும் |
| | குரங்கு | : | .................. |
| 7. | மா | : | கொட்டை |
| | ஆமணக்கு | : | .................. |
| 8. | தென்னை | : | பிள்ளை |
| | மா | : | .................. |
| 9. | பாடகன் | : | பாடகி |
| | நடிகன் | : | .................. |
| 10. | ஓவியம் | : | ஓவியன் |
| | சிலை | : | .................. |

சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

11. லஸ்ஸன பேஈளய :.............................

12. வெட கரன்ன :.............................

பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

13. I have two pens :.............................

14. That is a clock :.............................

பின்வரும் வசனங்களை ஒழுங்கமைக்குக.

15. கண்ணுங் - நாம் - கற்க - கல்வியைக் - கருத்துமாக - வேண்டும்.

..........................................................................

16. ஈடு - போர் - நெப்போலியன் - இணையற்ற வீரன் - ஒரு

..........................................................................

17. இலங்கையில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படும் தொழில் எது?

i. நெசவுத் தொழில் ii. மீன்பிடித்தல்

iii. கமம் செய்தல்

18. ஒரு பழத்தில் பல விதையுள்ள பழங்கள்.

i. மாதுளை, பப்பாசி

ii. வாழை, றம்புட்டான்

iii. மா, மாதுளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. தாவரங்களினால் கிடைக்கும் பயன் ஒன்று.

i. சூழலை குளிர்ச்சியாக வைக்கும்

ii வெப்பத்தைத் தரும்

iii. சூழலை மாசடையச் செய்யும்

**பின்வரும் வாக்கியங்களுள் எழுவாய், செயற் படுபொருள், பயனிலை உள்ள வாக்கியத் திற்குக் கோடிடுக.**

20. i. சிறுவன் பந்து விளையாடினான்.

ii. குமரனும் ரகுமானும் சிரித்தார்கள்.

iii. நான் அழுகிறேன்.

21. i. வேடனைக் கரடி துரத்தியது.

ii. ஆசிரியர் கற்பித்தார்.

iii. மழை சோவெனப் பொழிந்தது.

**சரியான தொகுதிக்குக் கோடிடுக.**

22.

| i. | ii. | iii. |
|---|---|---|
| மரவள்ளி<br>வல்லாரை<br>பாகற்காய் | பன்னீர்<br>தண்ணீர்<br>வெந்நீர் | முன்னூறு<br>பண்ணிரெண்டு<br>பதினாறு |

23.

| i. | ii. | iii. |
|---|---|---|
| குண்டுகுழி<br>பொட்டிபடுக்கை<br>கூண்டுக்கிளி | நேர்வழி<br>தென்றல்காற்று<br>வயல்வரம்பு | சாதிசனம்<br>பொட்டிப்பாம்பு<br>கட்டிக்கரும்பு |

24. மெழுகுப்படை உள்ள தாவர இலை யாது?

i. வாழை ii. தாமரை
iii. அல்லி

25. மீன் அசையாது ஓர் இடத்தில் நிற்க உதவும் செட்டை எது?

i. மார்புச் செட்டை ii வாற்செட்டை
iii. முதுகுச் செட்டை

26. பலகையை தொழிலுக்குப் பயன்படுத்துபவர்.

i. கமக்காரன் ii. தச்சன்
iii. மீன்பிடிப்பவன்

27. வனைச் சில்லு பயன்படுத்தும் தொழில் பின்வருவனவற்றுள் எது?

i. உலோக வேலை

ii. தையல் வேலை

iii. மட்பாண்ட வேலை

28. காந்தத் துண்டை நோக்கி கவரப்படும் பொருட் கள் யாவை?

i. பித்தளை, செம்பு

ii. உருக்கு, இரும்பு

iii. பலகை, இரும்பு

iv. அலுமினியம், உருக்கு

29. 240 முட்டைகளில் 3/8 பங்கு முட்டைகள் பழுதடைந்திருந்தன. எஞ்சிய நல்ல முட்டை கள் எத்தனை?

i. 90 முட்டைகள்

ii. 150 முட்டைகள்

iii. 120 முட்டைகள்

30. 20 லீற்றர் கொள்ளளவுடைய பாத்திரத்திற்கு 500 மில்லி லீற்றர் பாத்திரத்தால் நீர் நிரப்ப எத்தனை தடவைகள் நீர் ஊற்ற வேண்டும்?


31. தேங்காய் குவியல் ஒன்றில் 249 தேங்காய்கள் இருந்தன. அதில் 18 தேங்காய்கள் பழுதடைந் துள்ளன. மிகுதித் தேங்காய்களை மூன்று குவி யலாக பிரித்தால் ஒரு தேங்காய் குவியலில் உள்ள மொத்த தேங்காய்கள் எத்தனை?

32. 


நிறந்தீட்டப்பட்ட பகுதியை முழு உருவில் எழுதினால் வரும் விடை.

i. 1/2 ii. 5/6
iii. 3/12


33. கீழே தரப்பட்டுள்ள இரண்டு பென்சில்களின் இடையே உள்ள வித்தியாசம் யாது?




**கோலத்திற்கேற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

34. 

1 2 3 A B C

35. 


1 2 3

A B C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் கொடிகளுக்குரிய பெயரை எழுதுக.

(பாகல், கொடி தோடை, முடக்கத்தான், சாத்தாவாரி, சுரைக்காய்)





36. .............. 37. ............... 38. ...............

39. பின்வரும் கருவிகளுள் பற்சில்லுகளைக் கொண்டது.

i. வானொலி ii. கடிகாரம்
iii. தொலைபேசி

40. வானில் வானவில்லைக் காணக்கூடிய சந்தர்ப்பம் .

i. பௌர்ணமி தினத்தில்
ii. வானம் தெளிவாக உள்ள நேரத்தில்
iii. மழை பெய்யும் சந்தர்ப்பமொன்றில்

41. இயற்கையின் தாக்கத்தால் ஏற்படக்கூடியது.

i. வாகன விபத்து
ii. மின்னல் தாக்கம்
iii. பாம்பு தீண்டுதல்

42. வானிலை தொடர்பான முன்னறிவித்தல்களை வெளிவிடும் நிறுவனம்.

i. இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
ii. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
iii. வளி மண்டலவியல் திணைக்களம்

43. மாத்தளை எந்த மாகாணத்தில் அமைந்துள்ளது?

i. தென் மாகாணம்
ii. மத்திய மாகாணம்
iii. வடமத்திய மாகாணம்

44. சந்தையில் மாம்பழங்களின் விலை மிகவும் மலிவாக இருந்தது. இதற்கான காரணமாக இருக்கக் கூடியது.

i. மாம்பழத்தை மக்கள் வாங்க விரும்பாமை.
ii. மாம்பழத்தின் உற்பத்தி அதிகரித்தமை.
iii. மாம்பழங்கள் பழுதடைந்தமை.

45. இலங்கை தபால் திணைக்களத்தின் இலச்சினையில் உள்ளது?

i. கிளி ii. தபால் பெட்டி
iii. புறா

தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

(கப்பி, அம்மியும் குளவியும், உரல் உலக்கை, துருவி, கரி அழுத்தி)

46. ஆடை அழுத்தல் :..............................
47. மிளகாய் அரைத்தல் :..............................
48. நீர் இழுத்தல் :..............................
49. அரிசி குற்றுதல் :..............................

பின்வரும் இரட்டைக்கிளவிகளை பொருத்தமான இடைவெளிகளில் எழுதுக.


(திருதிரு, கலகல, சலசல, குபீர் குபீர், பளபள)

50. ஆற்று நீர் ............................ என ஓடியது.
51. திருடன் ........................... என விழித்தான்.
52. நங்கை அணிந்த தங்க ஆபரணம் .................. என மின்னியது.
53. திருமண வீட்டில் நின்ற பெண்கள் ............... என சிரித்தார்கள்.
54. உதிரம் ........................... எனப் பாய்ந்தது.

மூன்று காலங்களிலான வாக்கியங்களுள் இரண்டு தரப்பட்டுள்ளன. மேலும் ஒன்றை கண்டறிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

55. பாபு குளத்தில் நீராடுகிறான்.
பாபு குளத்தில் நீராடுவான்.
..........................................

56. நான் தருமம் செய்தேன்.
நான் தருமம் செய்கிறேன்.
..........................................

57. 


58. 


'கடற்கரையில் நான் கண்டுகளித்த எழில்மிகு காட்சிகள்' என்ற தலைப்பில் ஐந்து சொற்களுக்குக் குறையாத மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொன்றிலும் எழுவாய் பயனிலைகள் இடம் பெற்றிருத்தல் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

World Health Organization

Health topics | Data and statistics | Media centre | Publications | Countries | Programmes and projects | About WHO

## உலக சுகாதார ஸ்தாபனம் – World Health Organization (WHO)




### உயர் குருதி அழுத்தம்




உயர் குருதி அழத்தத்தினால் மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் ஏனைய பாரதூரமான நோய்கள் ஏற்படலாம்.

உயர் குருதி அழுத்தமானது சிறுநீரகப் பாதிப்பு, கண்பார்வைக் குறைபாடு, இரத்த நாளங்களில் வெடிப்பு என்பவற்றை ஏற்படுத்துவதோடு மூளைச் செயற்பாடுகளையும் பாதிக்கும்.

உயர் குருதி அழுத்தமானது நோய் அறிகுறிகள் எதனையும் வெளிக்காட்டாது. இதனால் பெரும்பாலானவர்கள் பக்கவாதம் போன்ற பாரிய நோய்ப் பாதிப்புகள் ஏற்பட்ட பின்னரே உயர் குருதி அழுத்தம் உள்ளது எனத் தெரிந்து கொள்கின்றனர்.

# ஏப்ரல் 7 உலக சுகாதார தினம்

### பாதுகாப்பு வழிமுறைகள்




உயர் குருதி அழுத்தம் வருமுன் காக்கக்கூடியதும் கட்டுப்படுத்தக் கூடியதுமான நோய் என்பதால் இவ்விரு வழிமுறைகள் மூலமும் நாம் பாதுகாப்பாக இருக்கலாம்.

உயர் குருதி அழுத்தத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான பிரதான வழிமுறை ஆரம்பத்திலேயே குருதி அழுத்தத்தைக் கண்டறிவதாகும்.


உயர் குருதி அழுத்தத்தை உணவில் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலமும் நிறை உணவை உட்கொள்வதன் மூலமும் மதுபானம், புகை பிடித்தல் மற்றும் போதைவஸ்துகளிலிருந்து தவிர்ந்திருப்பதன் மூலமும் தவிர்க்கலாம்.

சீரான உடற்பயிற்சியின் மூலமும் இது வருவதிலிருந்து பாதுகாத்துக் கொள் ளலாம்.

### Social media

Join the conversation on WHO's social media channels

- www.facebook.com/WorldHealthOrganization
- www.twitter.com/who
- www.youtube.com/who
- www.plus.google.com/+who





facebook இல் Like செய்யுங்கள்...

www.facebook.com/aharamJMF

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# Islamic Book House இன் 2013ஆம் ஆண்டிற்கான வெளியீடுகள்




## சுகாதாரமும் உடற்கல்வியும் பரீட்சை வழிகாட்டி, தரம்–07

இந்நூலில் அடங்கியுள்ள விசேடமான பயிற்சி வினாக்களும் விடைகளும் அலகுரீதியாக, எளிய முறையில் தயாரிக்கப்பட்டிருப்பதுடன் 4 மாதிரி (Model) வினாத்தாள்களையும் உள்ளடக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

விலை: 150/=




## கற்றலில் மாணவர் பிரச்சினைகளுக்கான தீர்வுகள்

இந்நூலில், உளவியல் நெறியில் மாணவப் பருவம், கற்றல் செயற்பாடுகள், ஞாபகமும் மறதியும் முதலிய விடயங்களை மையமாக வைத்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

விலை: 150/=




## சித்திரக் கலை (Volume 02)

பொருட்கூட்டம் கருத்து வெளிப்பாடும் ஆக்க அலங்காரமும்
Grade 6-13 Students & Others.


விலை: 480/=




## புலமைப்பரிசில் மாணவர்களுக்கான கடந்தகால வினா–விடை (2005–2012) தரம் – 05

புள்ளியிடல் திட்டத்திற்கமைவாகவும் மாணவர்கள் இலகுவில் விளங்கிக் கொள்வதற்கேற்பவும் செய்கை வழிகளுடன் கூடிய சுய கற்றல் வழிகாட்டி நூல்.


விலை: 265/=




## English Language

(Work Book & Model Papers)
Grade 06

விலை: 300/=




## சிறப்பு வெளியீடு

### ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமை அரும்புகள் வினாப்பத்திரங்களும் விடைகளும்

'புலமை அரும்புகளில்' உள்ள மாதிரி வினாத்தாள்களுக்கு விடையளிப்பதன் மூலம் பாடத்திட்டத்தின் முக்கிய பகுதிகள் மற்றும் விடயப்பரப்பை இனங்காண்பதற்கும் சரியான நேர முகாமைத்துவத்துடன் விடையளிப்பதற்கும் குறைபாடுகளை இனங்கண்டு அவற்றைச் சீர்படுத்திக்கொள்வதற்கும் மாணவ மாணவியருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. இதன் மூலம் தாம் எதிர்கொள்ளும் பரீட்சைகளுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்குத் தேவையான சக்தியையும் மனோத்திடத்தையும் பெற்றுக் கொள்ள முடிகின்றது.

ஆசிரியர்
மனோ சுரேஸ்
ரோயல் கல்லூரி – கொழும்பு

விலை: 350/=




## புலமைச் சிட்டுக்கள் (புலமைப்பரிசில் பரீட்சை பயிற்சி வழிகாட்டி) தரம் – 05

இந்நூல் பயிற்சிகள், பரீட்சையை இலகுபடுத்தும் துரித வழிகாட்டி வினாக்களைக் கொண்டுள்ளது. இவற்றிலுள்ள ஒவ்வொரு வினாவுக்குமுரிய விடைகளை விளங்கிக் கற்று நாளாந்தம் பயிற்சி செய்வதோடு அவற்றை மீள நினைவுபடுத்திக்கொள்ளல் இன்றியமையாத விடயமாகும் என்பதனை கவனத்தில் கொண்டு செயற்படல் வேண்டும்.

விலை: 320/=

**77, Dematagoda Road, Colombo 09.**
**Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org